# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=

இதழ் - 77

29.09.2024





# வாக்களித்தலும் தேசிய பொருளாதாரமும்




பெண் தொழில்முயற்சியாளர் விருதுகள் 2024 08






இளைஞர்களுக்கான உத்தரவாதங்கள் இல்லாத கடன்கள் 10





உறங்கி உயிர்க்கும் அரக்கச்செடி 14

# வாக்களித்தலும் தேசிய பொருளாதாரமும்

**அரசியல் விழிப்படைந்த ஒரு சமூகம்தான் அபிவிருத்தியில் முன்னேறும். இலங்கை அரசியலில் உரிமைக்கான போராட்டத்தில் ஈடுபடும் தமிழினம் தமது தமிழர் பொருண்மிய உயர்வுக்கு வாக்காளராயிருத்தல், வாக்களித்தல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.**






வேதநாயகம் தபேந்திரன்

இலங்கைத் திருநாட்டின் ஆட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் முடிவடைந்து விட்டது.

நான்கு வகையான தேர்தல்கள் மூலமாக எமது நாட்டில் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்தத் தேர்தல்களுக்கான செலவுகள் பலவகைகளில் இடம் பெறுகின்றன. இது தேசிய பொருளாதாரத்தின் மீதும் தனிநபர் பொருளாதாரத்தின் மீதும் மிகுந்த தாக்கத்தைச் செலுத்துகின்றன.

அதனால் தேர்தல் வாக்களிப்பும் தேசிய பொருளாதாரமும் எனும் விடயத்தில் வாக்களித்தல் என்ற ஒரு விடயத்தை மட்டும் பார்ப்போம்.

ஜனநாயக நாடொன்றில் வாக்குச் சீட்டின் மூலமாகத் தான் ஒரு குடிமகன் மாற்றங்களைத் தெரிவித்து அதனைச் சட்ட ரீதியாக்கலாம். அதனால் வாக்களித்தலும் வாக்குச் சீட்டும் மிகவும் முதன்மை பெறுகின்றன. அதற்கான காரணங்கள்.



### 01. வாக்குச் சீட்டுகளை அச்சடித்தல்

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 39 வேட்டபாளர்கள் போட்டியிட்ட 3 அடி நீளமான வாக்குச்சீட்டை அச்சிடுவதற்குப் பெருந்தொகைப் பணம் செலவானது. மொத்த வாக்காளர் தொகையை விடச் சற்றுக் கூடுதலான தொகைக்கு வாக்குச் சீட்டுகளை அச்சிடல் வேண்டும்.

இதனால் தேசியப் பொருளாதாரத்தின் பெருந்தொகைப் பணம் அதாவது மக்களது வரிப்பணத்திலிருந்து பெறப்பட்ட பணம் செலவானது.

### 02. வாக்குச் சீட்டுகளை பொதியிடல். எடுத்துச் செல்லல்

மிக மிக இரகசியமாக பாதுகாப்புடன் வாக்குச்சீட்டுகளைப் பொதியிடல் வேண்டும். குறிப்பாகத் தபால் மூலமாக வாக்களிப்பதற்கு விண்ணப்பித்த ஒருவருக்குரிய பொதியிடல் படிமுறைகள், காப்புறுதி செய்யப்பட்ட தபால் விநியோக முறைகள் பாரியவை.

ஆனால் வாக்காளர் ஒருவர் எந்த வித செலவுகளையும் செய்யாமல் தனது வாக்களிக்கும் உரிமையைப் பெறுகின்றார்.

### 03. பொறுப்புணர்வுடன் வாக்களித்தல்.

இம் முறை ஜனாதிபதித் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் 17 140 354 பேரில் 79.46 வீதமானோர் அதாவது அண்ணளவாக 80 வீதமானோர் வாக்களித்துள்ளனர்.

மிகுதி 20 வீதமான வாக்காளர்களில் வெளிநாடுகளில் வசிப்போர் என



அண்ணளவாக 10 வீதத்தினர் இருப்பார்கள். மிகுதி 10 வீதமானோர் வாக்களிக்கவில்லை.

இவர்களுக்கென செலவழித்து அச்சிடப்பட்ட வாக்குகளுக்கான பணம் விரயமானது.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாக்களிப்பு 70 வீதமென்ற சராசரியைக் காட்டுகின்றது. இங்கும் வாக்களிக்கக் கூடிய 25 வீதமானோர் தமது ஜனநாயகக் கடமையைச் செய்யவில்லை.

அவுஸ்திரேலியா போன்ற நாட்டில் இருப்பது போல தேர்தலில் வாக்களிக்காமல் இருப்போருக்குத் தண்டப்பணம் விதிக்கும் நடைமுறை கட்டாயம் தேவையானது.

இதனால் நாட்டில் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவதில் பெரும்பான்மையான மக்கள் பங்கேற்க முடியும். தேசிய பொருளாதாரத்தின் விரயமும் குறைவடையும்.

### 04. தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் நிராகரிக்கப்படும் வாக்குகள்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 2.2 வீதமான அதாவது 300300 பேர் அளித்த வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இது 6.5 வீதமாக உள்ளது.

நாம் சரியான விழிப்புணர்வை வழங்கினால் இதனை 0.5 வீதமாக அதாவது அரை வீதமாகக் குறைக்கலாம்.

அதிகம் படித்தவர்களுள்ள யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 04 வகையான தேர்தல்களில் அதாவது ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் ஆகியவற்றில் நிராகரிக்கப்படும் வாக்குகள் அதிகமாக உள்ளன.

### இதற்கான காரணங்கள்.

அ. ஒவ்வொரு தேர்தலும் ஒவ்வொரு வகையான வாக்களிப்பு முறையைக் கொண்டிருத்தல். இதனால் வாக்காளர்கள் தடுமாறிப் பிழையாக வாக்களித்தல்.

ஆ. கட்சிகள் தமது பிரசார நடவடிக்கைகளின் போது வாக்களிக்கும் முறைமை தொடர்பாகச் சரியான வழிநடத்துதலைச் செய்யாமை.

இ. வாக்களிக்கும் முறையைச் சரியாகச் சொல்லிக் கொடுக்கக் கட்சி உறுப்பினர்கள் முயற்சிக்கின்றனர். ஆனால் நாம் அதிகம் படித்தவர்களென்ற பரம்பரைத் திமிர் பலருக்கு உள்ளது.

அதனால் வாக்களிக்கும் முறையைச் சொல்லிக் கொடுக்க முற்படும் போது அதுதான் எனக்குத் தெரியுமேயென முறித்துக் கதைத்தல். தனது அறியாமையை ஒப்புக் கொண்டு புதிய ஒன்றைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம் நிறையப் பேரிடம் குறைவாக உள்ளது.

ஈ. விடுதலைப் போராட்டம் மிக நீண்டகாலம் நடைபெற்றது. அதனால் அரசாங்கத்தின் மீதுள்ள வெறுப்பைக் காட்டுவதற்காக வேண்டுமென்றே வாக்குச் சீட்டை நிராகரித்துப் பதிவு செய்தல். அல்லது வாக்களிக்காமல் வெறும் வாக்குச் சீட்டாக வாக்குப் பெட்டியினுள் இடல்.

உ. தமிழ்க் கட்சிகள் ஒற்றுமை இல்லாமல் கன்னை பிரிந்து அடிபட்டுக் கொள்வதால் வரும் வெறுப்பைக் காட்டுவதற்காக வாக்குச் சீட்டை நிராகரிக்கும் விதமாகப் பதிவு செய்தல்.

### 05. வாக்காளர் இடாப்பில் பெயர் பதிதல்.

சிறுபான்மை இனங்கள் 18 வயதை அடைந்த தமது பிள்ளைகளை வாக்காளர்களாக இடாப்பில் பதிவதனை உறுதி செய்தல் வேண்டும். இதன் மூலமாக மாவட்டத்துக்குரிய அபிவிருத்திக்கான நிதி அளவு, பல்கலைக்கழக அனுமதி எண்ணிக்கை போன்றவற்றை உரிய அளவில் பெறலாம்.

வாக்காளர் இடாப்பில் பெயர் இருப்பவர்கள் மட்டுமே வாக்களிக்கலாம். குடியிருப்பு முகவரி மாறுபடும் போது புதிய இடத்தில் வாக்காளராகப் பதிந்து கொள்வதனைக் கட்டாயம் உறுதி செய்து கொள்ளுங்கள்.

தற்போதைய பாராளுமன்றில் 225 ஆசனங்கள் உள்ளன. விகிதாசார முறையில் விருப்பு வாக்கு அடிப்படையிலான இந்தத் தேர்தல் முறையில் சிறுபான்மை இனங்கள் ஒற்றுமைப்பட்டு வாக்களித்தால் இன விகிதாசாரத்தை விட அதிக ஆசனங்களைப் பெறலாம். முஸ்லீம் கட்சிகள் இதில் கணிசமாக வெற்றி பெற்றுள்ளன.

தமிழ்க் கட்சிகள் பல கூறுகளாக நின்று போட்டியிடுவதால் தமக்குக் கிடைக்கக் கூடிய ஆசனங்களை இழக்கின்றன.

வன்னி, திருக்கோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் வெளியான நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் இதனை நிரூபித்துள்ளன.

அரசியல் விழிப்படைந்த ஒரு சமூகம் தான் அபிவிருத்தியில் முன்னேறும். இலங்கை அரசியலில் உரிமைக்கான போராட்டத்தில் ஈடுபடும் தமிழினம் தமது தமிழர் பொருண்மிய உயர்வுக்கு வாக்காளராயிருத்தல், வாக்களித்தல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.



மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

# அநுர மீதான எதிர்பார்ப்பு

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இடம்பெறும் அதிரடியான நிகழ்வுகள், புதிய அரசின் மீதான நம்பிக்கையை மக்கள் மத்தியில் அதிகரித்திருக்கின்றது. ஊழல் – மோசடிகள், வீண்விரயங்கள், அதிகார துஷ்பிரயோகங்களை இல்லாதொழித்து, குடும்ப ஆதிக்கம் இல்லாத ஒரு அரசாங்கம் உருவாக வேண்டும் என்பதுதான் மக்களுடைய எதிர்பார்ப்பாக இருந்தது. புதிய அரசாங்கத்தின் ஆரம்ப கட்ட செயற்பாடுகள் இந்த எதிர்பார்ப்புக்களை அரசாங்கம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையைத் தருகின்றது.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி தமது அன்றாடத் தேவைகளைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலை மக்களுக்கு ஏற்பட்டபோதுதான், "அரகலய" என்று சொல்லப்படும் மக்கள் போராட்டம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. இந்தப்போராட்டம் உண்மையில் வெறுமனே ஆட்சித் தலைமையில் மாற்றம் ஒன்றை மட்டும் கோரிநிற்கவில்லை. ஆட்சிமுறைமையில் ஒரு மாற்றத்தைத்தான் கோரி நின்றது. அதாவது சிஸ்டம் சேஞ் ஒன்றைத்தான் மக்கள் எதிர்பார்த்தார்கள்.

கோட்டாபயவை விரட்டியடிப்பதோ ராஜபக்ஷக்களை அதிகாரத்திலிருந்து அகற்றுவதோ மட்டும் அவர்களுடைய இலக்காக இருக்கவில்லை. கோட்டாபய நாட்டைவிட்டுத் தப்பிச் செல்ல ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தைக் கைப்பற்றினார். அரகலய போராட்டத்தை நடத்தியவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அவர் சொன்னார். ஆனால், தட்டுப்பாடாக இருந்த சில பொருட்களை அவர் கிடைக்கச் செய்தார் என்பதைவிட, ஆட்சி முறைமையில் எந்த மாற்றத்தையும் அவர் கொண்டுவரவில்லை.

மக்கள் போராட்டத்தை அதிகார பலத்தைக் கொண்டு அவர் அடக்கினார். மறுபுறத்தில் இந்தப் பொருளாதார நெருக்கடிகளுக்குக் காரணமாக இருந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்களுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்க அவர் துணியவில்லை. பதிலாக, அவர்களைப் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில் பெரும் தோல்வியை அவர் எதிர்கொள்வதற்கு இவைதான் காரணம். பொருளாதர நெருக்கடியிலிருந்து நாட்டைப் பாதுகாத்தவர் என்று அவரை, அவர் சார்ந்தவர்கள் முன்னிலைப்படுத்தியிருந்தாலும் மக்கள் அவரை முற்றாகவே நிராகரித்தார்கள்.

இந்தப் பின்னணியில் இப்போது பதவிக்கு வந்துள்ள அநுரகுமார திசாநாயக்க மீதும் அவரது குழுவினர் மீதும் மக்கள் நம்பிக்கை வைப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. குறிப்பாக, தனிநபர்களின் வியாபார நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல், நாட்டுக்குத் தேவையான பொருளாதாரக் கொள்கை ஒன்றை அவர் முன்னெடுப்பார் என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். குறிப்பாக உள்ளூர், கிராமியப் பொருளாதாரத்தை வளர்ப்பதில் அவர் அக்கறை காட்டுவார் என்ற நம்பிக்கை மக்களுக்குள்ளது. இதன் மூலமாகவே ஒரு தின்னிறைவை ஏற்படுத்த முடியும்!

# நிதி நெருக்கடியில் போக்ஸ்வேகன்

**பணவீக்கம் அதிகரித்து வரும் சூழ்நிலையில் செலவுகளை குறைக்க இலக்கு நிர்ணயிக்க வேண்டிய கட்டாயத்துக்கு போக்ஸ்வேகன் தள்ளப்பட்டுள்ளது. இல்லையெனில், அது இதர நிறுவனங்களுடன் போட்டியிட முடியாத சூழல் உருவாகி விடும் என்ற நிலை உருவாகி உள்ளதாக கூறப்படுகிறது**

அ. ராஜன் பழனிக்குமார்

போக்ஸ்வேகன் நிறுவனத்தின் கார் உற்பத்தித் திறன் தேவைக்கு அதிகமாவே உள்ளது. இதனால், பணியாளர்களை குறைக்க வேண்டிய தேவை அந்நிறுவனத்துக்கு எழுந்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு முன்பான 2019-ம் ஆண்டில் ஐரோப்பியர்கள் 1.57 கோடி கார்களை வாங்கினர். ஆனால், இப்போது வருடத்துக்கு அதைவிட 20 லட்சம் கார்களை குறைவாக வாங்குகிறார்கள் என 25 ஆயிரம் தொழிலாளர்கள் கூடியிருந்த வொல்ஃப்ஸ்பர்க் இல்லத்தில் பேசிய போக்ஸ்வேகன் தலைமை நிதி அதிகாரி அர்னோ ஆன்ட்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.



ஜெர்மனியைச் சேர்ந்த போக்ஸ் வேகன் தயாரிக்கும் கார்கள் உலக அளவில் பிரசித்தம். போக்ஸ்வேகன் நிறுவனத்தின் தயாரிப்புகளான டிகுவான், கோல்ஃப், ஜெட்டா, பீட்டில், விர்டஸ், ஜிடிஐ, அமியோ உள்ளிட்ட கார்களுக்கு உலக அளவில் லட்சக்கணக்கான வாடிக்கையாளர்கள் உள்ளனர். 87 ஆண்டுகள் பழமைவாய்ந்த அந்த நிறுவனம் தற்போது நிதி நெருக்கடியை சமாளிக்க தனது சொந்த நாட்டில் உள்ள சில ஆலைகளை மூடுவது குறித்து பரிசீலித்து வருவதாக வெளியான தகவல் வாகன உலகை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

பணவீக்கம் அதிகரித்து வரும் சூழ்நிலையில் செலவுகளை குறைக்க இலக்கு நிர்ணயிக்க வேண்டிய கட்டாயத்துக்கு போக்ஸ்வேகன் தள்ளப்பட்டுள்ளது. இல்லையெனில், அது இதர நிறுவனங்களுடன் போட்டியிட முடியாத சூழல் உருவாகி விடும் என்ற நிலை உருவாகி உள்ளதாக கூறப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பிறகு ஐரோப்பிய கார் சந்தை முன்பை விட சிறியதாகி உள்ளது. அதேசமயம், போக்ஸ்வேகன் ஐரோப்பிய சந்தையில் ஏறத்தாழ கால் பங்கை கொண்டிருப்பதால் விற்பனை மந்த நிலை காரணமாக 5 லட்சம் கார்களை குறைக்க வேண்டிய கட்டாயத்துக்கு இப்போது தள்ளப்பட்டுள்ளது. இது, இரண்டு ஆலைகளின் உற்பத்திக்கு சமமானது. எனவே, சந்தை வாய்ப்பின்மை காரணமாகவே சிக்கன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதே தவிர, எல்லோரும் கூறுவது போல நிறுவனத்தின் மோசமான செயல்திறன் காரணமில்லை என்கிறார் ஆன்ட்லிட்ஸ்.

### சீனாவின் போட்டி:

போக்ஸ்வேகன் போன்ற ஜாம்பவான் நிறுவனங்கள் நெருக்கடிகளை சந்திப்பதற்கு ஐரோப்பிய சந்தையில் சீனா தனது பங்கை அதிகரித்து வருவது முக்கிய காரணமாக கூறப்படுகிறது. குறிப்பாக, மின்சார வாகனங்களின் விற்பனையில் சீன நிறுவனங்களின் ஆதிக்கம் அதிகமாகவே உள்ளது.

அதனால், போக்ஸ்வேகன் மின்சார கார் விற்பனையில் தொய்வு ஏற்பட்டுள்ளது. அதிக பேட்டரி செலவுகள், நுகர்வோர்




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,08,200 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,27,000 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** உள்ளூர் உற்பத்திகள் கடந்த காலத்தில் பல நெருக்கடிகளை எதிர்கொண்டது. அவர்களுடைய அவல நிலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**என்.பன்னீர்ச்செல்வம்**
**மட்டக்களப்பு.**

**பதில் -** தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கை உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு நிச்சயமாக ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கலாம். அதிகாரத்துக்கு வந்த ஒரு வாரத்துக்குள்ளாகவே புதிய அரசாங்கம் எடுத்திருக்கும் செயற்பாடுகள் நம்பிக்கையளிப்பதாக இருக்கின்றது. குறிப்பாக, கடந்த காலத்தில் பதவியிலிருந்த அரசுகள் செய்த தவறுகளை நிவர்த்தி செய்வதில் புதிய அரசாங்கம் அக்கறை காட்டுவது நம்பிக்கையைத் தருகின்றது.

குறிப்பாக, உள்ளூர் உற்பத்திகளைப் பொறுத்தவரையில் இரண்டு பிரதான பிரிவினர் இருக்கின்றார்கள். அந்த இரண்டு தரப்பினர் மீதும் அவர்களுடைய கவனம் திரும்பியிருப்பது வரவேற்கத்தக்கது.

மீனவ மக்களுக்கு எரிபொருள் மானியம் வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இதன்படி எதிர்வரும் முதலாம் திகதி முதல் மீனவ மக்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்குமாறு ஜனாதிபதி திறைசேரிக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் மூலம் பல நாள் மற்றும் ஒரு நாள் கப்பல் பயணங்களுக்கு எரிபொருள் மானியம் மாதந்தோறும் வழங்கப்படும். மீனவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக மானியம் செலுத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் தடைபட்ட மீன்பிடி தொழிலை ஊக்குவிப்பதுடன், உற்பத்தி செலவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலமாக சந்தைகளில் பொதுமக்களுக்கு கடலுணவுகள் தாராளமாகக் கிடைப்பதற்கு வசதி ஏற்படும் என்பதும், அவற்றின் விலைகள் குறைவடையும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதுதான்.

மறுபுறத்தில் பெரும்போகத்தில் நெற்செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் உர மானியத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்குமாறு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க திறைசேரிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய ஹெக்டேயருக்கு இதுவரை வழங்கப்பட்ட 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு ஜனாதிபதியால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சரியான விவசாய இடுபொருள் முகாமைத்துவத்திற்காக நியாயமான விலையில் உரம் உள்ளிட்ட விவசாய இடுபொருட்களை வழங்குவதற்கும் சிறந்த விவசாய நடைமுறைகளுக்கேற்ப இரசாயன மற்றும் சேதனப் பசளை உள்ளிட்ட விவசாய இடுபொருட்களுக்கு மானியத்தை வழங்குவதற்கும் புதிய அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரவேற்கத்தக்க நடவடிக்கைகள்!

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 220/= |
| உருளைக்கிழங்கு | 200/= |
| பச்சை மிளகாய் | 200/= |
| தக்காளி | 230/= |
| மரவள்ளிக்கிழங்கு | 220/= |
| கோவா | 250/= |
| கரட் | 250/= |
| வாழைக்காய் | 200/= |
| சின்ன வெங்காயம் | 220/= |
| பாகற்காய் | 350/= |
| வெண்டிக்காய் | 120/= |
| பயற்றங்காய் | 160/= |
| பீற்றூட் | 80/= |
| முருங்கைக்காய் | 300/= |
| தேங்காய் | 130/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 200/= |
| கனடா டொலர் - | 218/= |
| சீன யுவான் - | 41/= |
| யுரோ - | 328/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 228/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 393/= |
| சுவிஸ் பிராங் - | 345/= |
| அமெரிக்க டொலர் - | 296/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 211/= |
| கனடா டொலர் - | 228/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 344/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 238/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 408/= |
| சுவிஸ் பிராங் - | 362/= |
| அமெரிக்க டொலர் - | 304/= |

> எங்கட ஆச்சி நெடுகவும் உது எங்கட தமிழ் ஆக்களின்ரை ஒரு பெரிய பிரச்சினை. ஆரும் ரெண்டு பேர் சந்திச்சினம் எண்டால் உடன ஹலோ ..ஹவ்..ஆர்யூ...ஓல் றைற்..எண்டு வெளிக்கிட்டிடுவினம். ஆனா மற்ற மொழிக்காறறில உந்தப்பிரச்சினை கிடையாது எண்டுவா

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

இப்ப கொஞ்ச நாளைக்கு முந்தி தெகிவளையில உள்ள ஒரு கந்தோருக்கு ஒரு அலுவலாப்போன வீட்டம்மா சிடுசிடுத்துக்கொண்டு வந்தா. நான் வெலவெலத்துப்போனன் ஏனெண்ணடா வெளியில எங்கயும் பிரச்சினை எண்டாலும் வீட்டம்மா எனக்குத்தான் வேட்டம்மாவாகி வேட்டு வைப்பா.

என்னவெளியிலவெய்யில்கடுமையோ எண்டபடி வீட்டம்மாக்கு தேசிக்காய் சக்கரைபோட்டுக் கரைச்சுக்கொண்டு வந்து குடுத்துப்போட்டு ஏதும் மிச்சம் விடுவாவோ குடிக்கலாமெண்டு பாத்துக்கொண்டு நிண்டன். அவ மிச்சம் ஒண்டும் விடாமை கடக்கு மடக்கு எண்டு குடிக்க எனக்கு விசயம் கொஞ்சம் சீரியஸ்தான் எண்டு விளங்கினதால கோயில்ல ஐயர் சொல்லிற மந்திரம் விளங்காட்டிலும் பயபக்தியா நிக்கிற பக்தன் மாதிரி வலு பவ்வியமா நிண்டன்.

உப்பிடி நிக்க அவவே அங்க கந்தோரில ஒருத்தன் நெத்தியில வீபூதியில பொட்டு வைச்சுக்கொண்டு இருக்கிறான். ஆனா என்னோட சிங்களத்தில கதைக்கிறான் எண்டா. நான் இஞ்சாரும் இப்ப சிங்கள ஆக்கள் சைவக்கோயில்களுக்குப் போறது கூட. அங்கை போன இடத்தில ஆரும் ஐயர்மார் எட்டி நிண்டு வீபூதியால ஒரு பொட்டுக் குத்திவிட்டிருப்பினம் எண்டன். அவ ..உடன..சாய்..சாய்.. அவன் பேசின சிங்களம் ஒண்டும் ஒழுங்கில்லை. ஏன் ஒழுங்காச்சிங்களம் தெரியாதவன்பொட்டுப்பிறையோட போன என்னைத் தமிழ் எண்டு தெரியுந்தானே தமிழிலையே கதைச்சிருக்கலாந்தானே எண்டு கொதிச்சா.

எங்கட ஆச்சி நெடுகவும் உது எங்கட தமிழ் ஆக்களின்ரை ஒரு பெரிய பிரச்சினை. ஆரும் ரெண்டு பேர் சந்திச்சினம் எண்டால் உடன ஹலோ ..ஹவ்..ஆர்யூ...ஓல் றைற்.. எண்டு வெளிக்கிட்டிடுவினம். ஆனா மற்ற மொழிக்காறறில உந்தப்பிரச்சினை கிடையாது எண்டுவா .உப்பிடித்தான் நான் ஒருக்கா வெள்ளவத்தையில இருக்கிற ஆசுப்பத்திரி ஒண்டுக்கு மருந்தெடுக்கப் போனனான். அங்க முன்னுக்கு ஒரு வடிவான பொம்பிளைப்பிள்ளை இருந்தது.



பொட்டு வைச்சா இன்னும் வடிவாய் இருக்குமெண்டு நினைச்சுக்கொண்டு கிட்டப்போக அது ஐ..மாத்தயா எண்டுது. நான் மருந்தெடுக்க வேணும் எண்டன். நம மொக்கத எண்டிச்சு சொன்னன். வயசா கீயத எண்டிச்சு சொன்னன். அட்றஸ் கியண்ட ரெலிபோன் நம்ப கியண்ட எண்டுது சரியெண்டு எல்லாத்தையும் சொன்னன். பேந்து அது இசறாட்ட வாடிவண்ட எண்டிச்சு நான் போய் வாங்கில இருந்தன். இருந்து கொண்டு ஆரோ நல்ல தாத்தாக்கும் அம்மேக்கும் பிறந்த பிள்ளை போல ஆளைப்போல குணமும் நல்லா இருக்கு. நான் தமிழிலை சொன்னாலும் அது வடிவா விளங்கி எழுதுதானே. எங்கயும் தமிழ் படிச்சிருக்கும்போல அதுதான் அதுக்கு என்ரை தமிழ் விளங்கி இருக்கெண்டு நினைச்சன்.

இப்பிடிப் பிள்ளையள் வேலை செய்ய இருந்தால் டாக்குத்தர் மாருக்கு நல்ல வரும்படி வருந்தானே எண்டு நினைச்சன்.

இப்பிடி நான் நினைச்சுக்கொண்டிருக்க அந்தப் பிள்ளையின்ரை போன் அடிச்சுது. உடன அது ஓமணை மம்மி இண்டைக்கு இஞ்சை பேஸன்ற்ஸ் கூட வந்திருக்கினம். சரியான பிசியா இருக்கிறன் . இனி எங்கட சனமும் சொல்லுறது ஒண்டையும் ஒழுங்காக் கேளாதுகள் எல்லே . அதுகளுக்கு திருப்பித் திருப்பி ஒரே விசயத்தைச் சொல்லிக் களைச்சுப் போனன்.நான் கொஞ்சம் பிந்தித்தான் வருவன் என்னைத் தேடாதையுங்கோ எண்டவும் நான் வீட்டம்மா சொல்லி விட்ட சாமான்களை வாங்காமல் போய் அவவிட்டைத் திட்டு வாங்கினமாதிரி மலாரடிச்சுப் போனன்.



# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1.வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.

2.சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.

3.கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.

4.ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.

5.நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1.பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

2.இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.

3.அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.

4.திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

5.கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

# பெண் தொழில்முயற்சியாளர் விருதுகள் / 2024

**கவினி ஞானரூபன்**




கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திற்கான மகளிர் சம்மேளனம் தனது வருடாந்த முதன்மை நிகழ்வான "று ஊ ஐ ஊ ீசுயுவுஉ ஐடீஉ யுடீஉ ஐளுஉ நுமுயு-றுமுஆநுே ENTREPRENEUR AWARDS 2024" என்ற பெண் தொழில்முயற்சியாளர் விருது நிகழ்வை வெகு சிறப்பாக நடாத்த இருக்கிறது.

இலங்கையிலும், சார்க் பிராந்தியத்திலும் மிகச் சிறந்த பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு அங்கீகாரமளித்து, வெகுமதியளிப்பதே இதன் நோக்கம்.

"பெண் தொழில்முயற்சியாளர் விருதுகள் 2024 நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2025 ஜனவரியில் இடம்பெறவுள்ள வைபவத்தில் பெருமதிப்புமிக்க WCIC PRATHIBHABHISHEKA என்ற பெண் தொழில்முயற்சியாளர் விருதுகள் 2024 இல் போட்டியிடுவதற்கு கடந்த சில ஆண்டுகளில் எந்த கடினமான சூழ்நிலையையும் எதிர்கொண்டு அதிலிருந்து வெளிவந்துள்ள தமது சரித்திரங்கள் மற்றும் சாதனைகளை பகிர்ந்து கொள்ளுமாறு மிகச் சிறந்த பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

தமது தொழிலை விரிவுபடுத்தி வளர்ப்பதில் அவர்களின் உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரத்திற்கு அவர்களுடைய பங்களிப்பு மற்றும் விளைவு ஆகியவற்றுக்காக பெண் தொழில் முயற்சியாளர்களைக் கௌரவிக்கும் வகையில் இவ்விருது வைபவம் இடம்பெறும். இப்போட்டியானது அடிப்படையில் இலங்கை பெண் தொழில்முயற்சியாளர்களுக்கானது என்றாலும், விசேட பிரிவின் கீழ் போட்டியிடுவதற்காக சார்க் பிராந்தியத்திலுள்ள பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான வாய்ப்பினையும் நாம் உள்ளடக்கியுள்ளோம்.

கடந்தகாலங்களில் WCIC இன் பெண் தொழில்முயற்சியாளர் விருதுகளுக்கு மேலும் பொலிவு சேர்ப்பிக்கும் வகையில் இது ஆண்டுதோறும் மென்மேலும் மெருகேறியுள்ளது. புதிய கருப்பொருளின் கீழ் தொடர்ந்து மூன்றாவது தடவையாக இடம்பெறும் விருது வழங்கல் வைபவத்தை 2024 இல் நாம் முன்னெடுப்பதுடன், இது ஏற்படுத்தியுள்ள தாக்கம் மிகத் தெளிவாகப் புலப்படுகின்றது.

வலுவான நிறுவன ஆட்சி மற்றும் நிதியியல் நடைமுறைகளை ஸ்தாபிக்க வேண்டிய தேவையையும், வர்த்தகத்திற்கு மூலோபாய வெளித்தோற்றத்திற்கான தேவையையும் விண்ணப்பதாரிகள் நன்கறிவர்," என்று WCIC இன் தலைவியான அனோஜி டி சில்வா அவர்கள் குறிப்பிட்டார்.

ஏற்பாட்டுக் குழுவின் சார்பில் இணைத் தலைவிகளான நிலானி செனவிரட்ண மற்றும் துசிதா குமாரகுலசிங்கம் ஆகியோர் தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கையில், "நாடெங்கிலுமுள்ள பெண் தொழில்முயற்சியாளர்களைக் கௌரவிப்பதற்காக இந்த தேசிய முயற்சியை முன்னெடுப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இதற்கான ஆர்வமும், வேகமும் ஏற்கனவே துளிர்விட்டுள்ளதுடன், இப்பயணத்தில் அங்கம் வகிப்பதற்கு தொழில்முயற்சியாளர்கள் பேரார்வத்துடன் காத்திருக்கின்றனர். தொடக்க வணிக முயற்சி, நுண், சிறிய, நடுத்தர மற்றும் பாரிய பிரிவுகளின் கீழ் விண்ணப்பங்களை நாம் ஏற்றுக்கொள்ளவுள்ளோம்.

ஒவ்வொரு பிரிவும் மீளாய்வுக்குட்படுகின்ற 2023/2024 ஆண்டில் குறிப்பிட்ட வருமானத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு பிரிவுக்கும் தங்க, வெள்ளி மற்றும் வெண்கல விருதுகள் வழங்கப்படும்.

தேசிய தொழில்முயற்சியாளர் விருதுகள் என்ற எமது விளைவை உண்மையாக ஏற்படுத்தும் வகையில், பிராந்திய பெண் தொழில்முயற்சியாளர்களின் பங்குபற்றலை நாம் எதிர்பார்ப்பதுடன், முன்னைய ஆண்டுகளைப் போலவே 9 மாகாணங்களிலிருந்தும் பங்கேற்பாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் அனைத்து விண்ணப்பங்கள் மத்தியிலும் மிகச் சிறந்த ஒன்றுக்கு "மாகாணத்தில் மிகச் சிறந்தவர்"(Best of the Province) என்ற விருது வழங்கப்படும்.

2024 க்கான இளம் பெண்

தொழில்முயற்சியாளர், மிகச்சிறந்த தொடக்க வணிகம், தைரியமான பெண், மிகச் சிறந்த ஏற்றுமதியை மையமாகக் கொண்ட தொழில்முயற்சியாளர் (தயாரிப்புக்கள் மற்றும் சேவைகள்) மற்றும் மிகச் சிறந்த சார்க் பிராந்திய தொழில்முயற்சியாளர், டிஜிட்டல் தொழில்முயற்சியாளர், மிகவும் புத்தாக்கம்மிக்க தொழில்முயற்சியாளர் மற்றும் சமூக தொழில்முயற்சியாளர் போன்ற மதிப்புமிக்க விசேட விருதுகளும் வழங்கப்படுவதற்கு பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வைபவத்தின் உச்ச நிகழ்வாக "வருடத்தின் மிகச் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் - 2024" (WOMAN ENTREPRENEUR OF THE YEAR - 2024) தெரிவு இடம்பெறும். "நிகழ்வுக்கான விண்ணப்பங்களை றறற.றஉைஉளட.டம மூலமாக பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும், அல்லது WCIC அலுவலகத்திலிருந்து கோரிப் பெற்றுக்கொள்ள முடியும் (ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும்). விண்ணப்பங்கள் மிகவும் கவனமாக பூர்த்தி செய்யப்பட்டு, விண்ணப்பதாரியின் சரித்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்களுடன் றுஊஐஊ ற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நுழைவுகளுக்கான இறுதித் திகதி 2024 ஒக்டோபர் 31 ஆகும்," என்று இணைத் தலைவிகள் குறிப்பிட்டனர்.

WCIC Prathibhabhisheka - பெண் தொழில்முயற்சியாளர் விருதுகள் 2024 க்கு Platinum கூட்டாளராக AIA Insurance, Diamond மற்றும் வங்கிச்சேவை கூட்டாளராக DFCC ALOKA, ஒத்துழைப்பு கூட்டாளராக USAID CATALYZE ஊடாக U S Agency for International Development (USAID), தனியார் துறை அபிவிருத்திச் செயற்பாட்டுக்கான புழுடன கூட்டாளராக McLarens Group, தங்க அனுசரணையாளராக Sunquick Lanka Pvt Ltd,Silver கூட்டாளராக Hayleys PLC, Bronze கூட்டாளராக Imperial Tea Exports (Pvt) Ltd, படைப்பாக்க கூட்டாளராக வுசயைன மற்றும் அறிவு கூட்டாளராக Ernst & Young ஆகியன வலுவூட்டுகின்றன.

# நிதி நெருக்கடியில் போக்ஸ்வேகன்



மானியங்களை திரும்பப்பெறுதல், பொது சார்ஜிங் கட்டமைப்புகளை உருவாக்குவதில் தாமதம் உள்ளிட்டவை காரணமாக ஐரோப்பாவில் மின்சார வாகனங்களுக்கான தேவை பலவீனமான நிலையில் உள்ளது. இது, போக்ஸ்வேகன் போன்ற நிறுவனங்களின் லாப வரம்பில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக கூறப்படுகிறது.

சீனாவில் டஜன் கணக்கான கார் தயாரிப்பு நிறுவனங்கள் ஐரோப்பாவுடன் ஒப்பிடும்போது மிகவும் மலிவான விலையில் மின்சார கார்களை தயாரிக்கின்றன. அந்த கார்கள் ஐரோப்பிய சந்தையில் அதிகளவில் விற்கப்படுகின்றன. இதனால், ஜெர்மனியின் பிஎம்டபிள்யூ மற்றும் மெர்சிடிஸ்-பென்ஸ் போன்ற நிறுவனங்கள் போட்டியிட முடியாமல் அவற்றின் லாபமும் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளதாக கூறப்படுகிறது.

1.20 லட்சம் பணியாளர்கள்: போக்ஸ்வேகன் ஜெர்மனியில் 10 ஆலைகளை கொண்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள 6.84 லட்சம் தொழிலாளர்களில் 1.20 லட்சம் பேர் ஜெர்மனியில் மட்டும் பணிபுரிகின்றனர். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜெர்மனியின் பொருளாதார வளர்ச்சியின் அடையாளமாக போக்ஸ் வேகன் திகழ்கிறது.

இத்தனை புகழ்வாய்ந்த போக்ஸ்வேகன் நிறுவனத்தை தாமதமானாலும் அதன் நிர்வாகம், ஊழியர் பிரதிநிதிகள், அரசு ஆகியவை இணைந்து பேச்சுவார்த்தை மூலம் ஆலையை மூடும் பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே அதன் வாடிக்கையாளர்களின் தற்போதைய எதிர்பார்ப்பு.

இதனிடையே, ஜெர்மனியின் எம்டென் நகரில் உள்ள போக்ஸ்வேகன் தொழிற்சாலையை சமீபத்தில் பார்வையிட்ட அந்நாட்டு பொருளாதார அமைச்சர் ராபர்ட் ஹாபெக், தொழிற்சாலைகளை மூடும் முடிவை கைவிடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் அந்நிறுவனத்துக்கு தேவையான உதவிகள் செய்யப்படும் என்றும் உறுதி அளித்துள்ளார்.



# இளைஞர்களுக்கான உத்தரவாதங்கள் இல்லாத கடன்கள்




வணிகத்தைத் தொடங்க அல்லது கல்வி வாய்ப்புகளைத் தொடர இளைஞர்களுக்கு மூலதனப் பற்றாக்குறை ஒரு பெரிய தடையாக உள்ளது. பாரம்பரிய கடன்களுக்கு பெரும்பாலும் பிணை தேவைப்படுகின்றது, இது சொத்துக்கள் இல்லாதவர்களுக்கு பெரும் தடையாக இருக்கும். இருப்பினும், இந்த தேவையை நிவர்த்தி செய்வதற்கான முன்முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக இளைஞர்களுக்காக வடிவமைக்கப்பட்ட "உத்தரவாதங்கள் இல்லாத" கடன்களை வழங்குவதனை குறிப்பிடலாம்.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

### உத்தரவாதங்கள் இல்லாத கடன் என்றால் என்ன ?

சொத்து அல்லது வாகனங்கள் போன்ற பிணையம் தேவைப்படும் பாதுகாப்பான கடன்களைப் போலன்றி, உத்தரவாதங்கள் இல்லாத கடன்கள் தகுதி மற்றும் வட்டி விகிதங்களைத் தீர்மானிக்க கடனாளியின் கடன் தகுதியை நம்பியுள்ளன. முக்கியமாக ஒருவருடைய கடந்த கால கடன் செலுத்திய அல்லது கையாண்ட முறைமை (கடன் வரலாறு), வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு நிலைத்தன்மை போன்ற காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

எனவே, வரம்புக்குட்பட்ட கடன் வரலாறு அல்லது குறைந்த வருமானம் கொண்ட இளைஞர்களுக்கு, அவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட உத்தரவாதங்கள் இல்லாத கடன்கள் வழக்கத்தில் உள்ள கடன் கொடுக்கும் மற்றும் பெறுகின்ற முறைமையை மாற்றி அமைத்து ஒரு புதிய முறைமையை நிச்சயமாக உருவாக்கும் விதமாக இது அமையும். இந்த உத்தரவாதங்கள் இல்லாத கடன்கள் பெரும்பாலும் பின்வரும் தன்மைகளைக் கொண்டதாக காணப்படும்:

- குறைந்த கடன் தொகைகள்: பாரம்பரிய வணிகக் கடன்களுடன் ஒப்பிடும்போது, உத்தரவாதங்கள் இல்லாத இளைஞர் கடன்கள் பொதுவாக சிறிய வியாபாரத்தினை தொடங்கும் நோக்கத்திற்காக மற்றும் கல்விச் செலவுகளுக்கான சிறிய நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.
- சாதகமான விதிமுறைகள்: கடன் வாங்குபவரின் வயது மற்றும் எதிர்காலத்தில் சம்பாதிக்கும் திறனைக் கருத்தில் கொண்டு, நிலையான உத்தரவாதங்கள் இல்லாத கடன்களுடன் ஒப்பிடும்போது வட்டி விகிதங்கள் மிகவும் குறைந்ததாக இருக்கலாம்.
- குறுகிய கடன் திருப்பிச் செலுத்தும் விதிமுறைகள்: குறுகிய கடன் விதிமுறைகள் மொத்த வட்டிச் செலவைக் குறைத்து, பொறுப்பான கடன் வாங்கும் பழக்கத்தை ஊக்குவிக்கின்றன.

### இளைஞர்களுக்கு உத்தரவாதங்கள் இல்லாத கடன்களை வழங்குவது யார்?

இளைஞர்களுக்கான நிதி இடைவெளியைக் குறைக்க பல நிறுவனங்கள் முன்னேறி வருகின்றன, அவற்றுள்:

- அரசாங்க திட்டங்கள்: பல அரசாங்கங்கள் உத்தரவாதங்கள் இல்லாத கடன் விருப்பங்களை உள்ளடக்கிய இளைஞர் மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடங்குகின்றன. இந்த திட்டங்கள் பெரும்பாலும் வணிக மேம்பாடு அல்லது திறன் பயிற்சி போன்ற குறிப்பிட்ட இலக்குகளை குறிவைக்கின்றன. உள்ளூர் அரசு நிறுவனம் அல்லது இளைஞர் மேம்பாட்டுத்துறை மூலம் இதுபோன்ற திட்டங்களைப் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.
- நுண்கடன் நிறுவனங்கள் (Microlenders): பாரம்பரிய வங்கிக் கடன்களுக்குத் தகுதி பெறாத தனிநபர்களுக்கு சிறு கடன்களை வழங்குவதில் நுண்கடன் நிறுவனங்கள் நிபுணத்துவம் பெற்றவை. இந்த நிறுவனங்கள் பெரும்பாலும் இளம் தொழில் முனைவோருக்கு சேவை செய்கின்றன, மேலும் வணிக யோசனைக்கு ஆரம்ப நிதியை நாடுபவர்களுக்கு இது ஒரு நல்ல தேர்வாக இருக்கும்.
- இலாப நோக்கற்ற நிறுவனங்கள் (Non-profit Organizations): இளைஞர் அதிகாரமளித்தல் அல்லது தொழில் முனைவோர் மீது கவனம் செலுத்தும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் உத்தரவாதங்கள் இல்லாத கடன் திட்டங்களை வழங்கலாம் அல்லது இளைஞர்களை தொடர்புடைய ஆதாரங்களுடன் இணைக்கலாம்.

### விண்ணப்பிக்கும் முன் கருத்தில் கொள்ள வேண்டியவை.

இளைஞர்களுக்கான உத்தரவாதங்கள் இல்லாத கடன்கள் நிதி வலுவூட்டலுக்கான ஒரு நம்பிக்கைக்குரிய பாதையை வழங்கினாலும், கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான காரணிகள் பல உள்ளன:

- வட்டி விகிதங்கள்: உத்தரவாதங்கள் இல்லாத இளைஞர் கடன்கள் பாரம்பரிய உத்தரவாதங்கள் இல்லாத கடன்களை விட குறைவான விகிதங்களைக் கொண்டிருந்தாலும், வட்டி விகிதங்கள் பாதுகாக்கப்பட்ட கடன்களை விட வேறுபட்டு காணப்படும். வெவ்வேறு கடனளிப்பவர்களிடமிருந்து விகிதங்களை ஒப்பிட்டு, கடன் பெறுநர் திருப்பிச்

செலுத்துவதை வசதியாக நிர்வகிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானது.

• தகுதிக்கான அளவுகோல்கள்: ஒவ்வொரு திட்டத்திற்கும் அல்லது கடன் வழங்குபவருக்கும் குறிப்பிட்ட தகுதித் தேவைகள் இருக்கும். வயது வரம்புகள், வதிவிடத் தேவைகள் அல்லது கடன் நோக்கங்களுக்கான வணிகத் திட்டம் ஆகியவை இதில் அடங்கும்.

• வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு: சில திட்டங்கள் வழிகாட்டுதல் அல்லது வணிக மேம்பாட்டு ஆதாரங்களுடன் உத்தரவாதங்கள் இல்லாத கடன்களை இணைக்கலாம். இளம்தொழில்முனைவோர் தங்கள் முயற்சிகளின் ஆரம்ப கட்டங்களில் செல்ல இது விலைமதிப்பற்றதாக இருக்கும்.

**வலுவான கடன் விண்ணப்பத்தை உருவாக்குதல்**

• உறுதியான கடன் வரலாற்றை உருவாக்குங்கள்: உத்தரவாதங்கள் இல்லாத கடன்களுடன் கூட, ஒரு நல்ல கடன் வரலாறு சிறந்த வட்டி விகிதத்தைப் பாதுகாக்கும். உதாரணமாக கடன் அட்டை (Credit Card) பெற்று அதை பொறுப்புடன் பயன்படுத்துவதன் மூலம் மேலும் மேம்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

• ஒரு கட்டாய வணிகத் திட்டத்தை உருவாக்கவும்: வணிக முயற்சிகளை நோக்கிய கடன்களுக்கு, நன்கு வரையறுக்கப்பட்ட வணிகத் திட்டத்தைக் கொண்டிருப்பது உங்கள் தயார்நிலையை வெளிப்படுத்துகின்றது மற்றும் உங்கள் ஒப்புதலுக்கான வாய்ப்புகளை அதிகரிக்கின்றது.

• எதிர்காலத்தில் சம்பாதிக்கும் சாத்தியத்தை முன்னிலைப்படுத்தவும்: உங்கள் கடன் வரலாறு குறைவாக இருந்தால், உங்கள் வணிக யோசனையிலிருந்து வேலை வாய்ப்புகள் அல்லது வருமான கணிப்புகள் மூலம் உங்களின் எதிர்கால வருவாய் திறனை வலியுறுத்துங்கள்.

**நம்பிக்கைக்குரிய அம்சங்கள்:**

• வளர்ந்து வரும் இளைஞர் சனத்தொகை: இலங்கையில் ஒரு பெரிய மற்றும் வளர்ந்து வரும் இளைஞர் சனத்தொகை உள்ளது, இது கடன் வழங்குபவர்களுக்கு பொருத்தமான சந்தையாக அமைகின்றது.

• அரசாங்க ஆதரவு: இலங்கை அரசாங்கம் இளைஞர் மேம்பாடு மற்றும் தொழில்முயற்சியின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ளது. உத்தரவாதங்கள் இல்லாத கடன்களை வழங்கும் அரசு திட்டங்கள் குறிப்பிடத்தக்க ஊக்கத்தை அளிக்கலாம்.

• நுண்நிதி அனுபவம்: இலங்கையில் நன்கு நிறுவப்பட்ட நுண்கடன் துறை உள்ளது. இது இளைஞர்களுக்கான உத்தரவாதங்கள் இல்லாத கடன்களை விரிவுபடுத்துவதற்கான அடித்தளத்தை வழங்க முடியும்.

**எதிர்கொள்ள வேண்டிய சவால்கள்:**

• வரையறுக்கப்பட்ட கடன் வரலாறு: பல இளைஞர்களுக்கு கடன் வரலாறு இல்லாமல் இருக்கலாம், இதனால் கடன் வழங்குபவர்கள் தங்கள் கடன் தகுதியை மதிப்பிடுவது கடினம்.

• அதிக வட்டி விகிதங்கள்: உத்தரவாதங்கள் இல்லாத கடன்கள் இயல்பாகவே வட்டி விகிதங்களைக் கொண்டுள்ளன. இலங்கையில், ஏற்கனவே அதிக கடன் வாங்கும் செலவுகள் இருப்பதால், கட்டுப்படியாகக்கூடியது ஒரு பிரச்சினையாக இருக்கலாம்.

• நிதி கல்வியறிவு: பொறுப்பான கடன் வாங்குதல் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றை நிர்வகிப்பதற்கு நிதி கல்வியறிவு திறன் கொண்ட இளைஞர்களை சித்தப்படுத்துவது மிகவும் முக்கியமானதாக இருக்கும்.

**வெற்றிக்கான சாத்தியம்**

இந்த முறையை இலங்கை எவ்வாறு வெற்றிகரமானதாக்க முடியும் என்பது பற்றி இப்பொழுது பார்ப்போம்:

• கடன் அறிக்கை அமைப்பு (Credit Reporting System): வாடகைக் கொடுப்பனவுகள் அல்லது பயன்பாட்டு பில்கள் போன்ற மாற்றுத் தரவுப் புள்ளிகளைக் கைப்பற்றும் வலுவான கடன் அறிக்கையிடல் அமைப்பை உருவாக்குவது பாரம்பரிய கடன் மதிப்பெண்களுக்கு அப்பால் இளைஞர்களின் கடன் தகுதியை மதிப்பிட உதவும்.

• வருமானம் அடிப்படையிலான திருப்பிச் செலுத்துதல்: எதிர்காலத்தில் வருவாய் ஈட்டும் சாத்தியக்கூறுகளுக்கு ஏற்ப திருப்பிச் செலுத்தும் திட்டங்களைத் தயார் செய்வது. குறிப்பாக நிறுவப்படாத வருமான வழிகளைக் கொண்ட தொழில்முனைவோருக்கு, மலிவுத்தன்மையை மேம்படுத்தலாம்.

• நிதி கல்வியறிவு திட்டங்கள்: கல்வி நிறுவனங்கள் அல்லது கடன் திட்டங்களில் நிதி கல்வியறிவு திட்டங்களை ஒருங்கிணைத்தல் இளைஞர்கள் தகவலறிந்த கடன் முடிவுகளை எடுப்பதை உறுதிசெய்ய முடியும்.

அடுத்த வாரமும்...


# தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

## கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# பொருளாதாரம் மற்றும் தலைமைபதவிகளில் பெண்களின் பங்களிப்பு

சத்குரு

**லட்சியத்தை அடைய வேண்டும் என்று தீ பிடித்தது போல ஓடாமலே வெற்றிகரமாக வாழ வழி உள்ளது. உங்களை சுற்றியுள்ள அனைத்தின் மீதும் உங்களுக்கு அக்கறை இருக்குமானால், நீங்கள் எதற்கும் தயங்க மாட்டீர்கள், இயல்பாகவே உங்களில் சிறப்பாக செயல்படுவீர்கள். இதுவே பெண்கள் செயல் புரியும் விதம். இதுவே இந்த பூமியில் செயல்பட வேண்டிய விதமும் கூட**



மனிதனை உற்பத்தி செய்ய இயற்கை, ஆணைவிட பெண்ணுக்கே அதிக முக்கியத்துவமும் பொறுப்பும் அளித்துள்ளது. எனவே உற்பத்தி பிரிவில் இயல்பாகவே பெண்கள் சிறப்பாகவே செயல்பட முடியும். ஆணைவிட பெண்கள் எப்போதும் பெரும் “பேறு” பெற்றவர்கள். இந்த தன்மையை நான் பெண்கள் மீது உள்ள உண்மையான மரியாதையுடனே குறிப்பிடுகிறேன். இன்று நாம் ஒன்றுதிரட்டும் மற்றும் உற்பத்திக்கான வாய்ப்புகளை பற்றியே நினைக்கிறோம். ஆனால்இதிலும்புதுமையான முயற்சிகளுக்கு இடமுண்டு. இதில் பெண்கள் சிறப்பாகவே செயல்படமுடியும்.



நேரடியாக உற்பத்தியில் ஈடுபடுவதற்கு பதிலாக வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் சந்தை பிரிவுகளில் பெண்கள் சிறப்பாக செயல்பட முடியும்

நேரடி உற்பத்தி பிரிவு ஆண்தன்மையை அடிப்படையாகக் கொண்டது. இது கட்டாய தினசரி வருகை அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இதில் பெண்கள் நேரடியாக ஈடுபடும் போது தங்களது வாழ்வியல் பொறுப்பு மற்றும் குடும்ப சூழ்நிலைகளை முழுமையாக கையாள முடியாத நிலை ஏற்படலாம். பெண்களால் வேலை செய்ய முடியாது என்று இதற்கு அர்த்தம் அல்ல. அவர்கள் வாழ்வில் சில நேரங்களில் தேவைப்படும் நீண்ட ஓய்வுகள் உற்பத்தியில் தொய்வு ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. நேரடியாக உற்பத்தியில் ஈடுபடுவதற்கு பதிலாக வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் சந்தை பிரிவுகளில் பெண்கள் சிறப்பாக செயல்பட முடியும்.

## பெண்களும் மிருதுவான பொருளாதாரமும்

பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டே இன்று உலகம் முழுக்க செயல்கள் மேற்கொள்ளப்படுகிறது. மக்கள் தொகையில் 50ூ அல்லது அதற்கு மேலும் அதிகமாக உள்ள மகளிர் பொருளாதாரத்திலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க வேண்டும். இனி வரக்கூடிய காலங்களில் பொருளாதார தலைமை, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு முக்கியத்துவம் பெற உள்ளது. வியாபாரமானாலும் அல்லது வேறு எந்த துறையாக இருந்தாலும் தொலைநோக்கு பார்வையே ஒரு தலைவனுக்கு முக்கியமான தகுதி. மற்றவர்கள் சிந்திக்காத புதிய கோணங்களில் தலைவராக இருப்பவர் சிந்தித்து செயல்படுவது மிகவும் அவசியம். புதிதாக எதையும் காண தவறும் போது நீங்கள் மற்றவர்களின் கேலிப் பொருளாகி விடக் கூடும். பொதுவாக, தினமும் நடக்கும் பந்தயம் போன்ற வாழ்க்கை முறை, வேறு எதையும் பார்க்க முடியாத ஒரு சூழ்நிலையை ஆணுக்குள் ஏற்படுத்தி உள்ளது. ஆனால் பெண்கள், எந்த சூழ்நிலையிலிருந்தும் விலகி நின்று, என்ன நடக்கிறது என பார்க்கும் தன்மையை தங்களுக்குள் வளர்த்துக் கொண்டுள்ளனர்.

லட்சியத்தை அடைய வேண்டும் என்று தீ பிடித்தது போல ஓடாமலே வெற்றிகரமாக வாழ வழி உள்ளது. உங்களை சுற்றியுள்ள அனைத்தின் மீதும் உங்களுக்கு அக்கறை இருக்குமானால், நீங்கள் எதற்கும் தயங்க மாட்டீர்கள், இயல்பாகவே உங்களில்



சிறப்பாக செயல்படுவீர்கள். இதுவே பெண்கள் செயல் புரியும் விதம். இதுவே இந்த பூமியில் செயல்பட வேண்டிய விதமும் கூட

பொருளாதார செயல்முறையை மிருதுவாக்குவதில் பெண்களால் முக்கிய பாங்காற்ற முடியும். இதனால் நீண்ட கால அடிப்படையில் பொருளாதாரம் மனித குல நலனுக்கு பயனுள்ளதாக அமைந்திடும். மக்கள் நலனுக்காகவே வணிகங்கள் நடைபெற வேண்டுமே தவிர வணிக நலனுக்கு மக்களை அடிமையாக்கி விடகூடாது எனும் நிலையை உலகம் முழுக்க மீண்டும் உருவாக்க வேண்டும். ஒரு பாலினத்தார் மட்டுமே மனித குலத்தை வடிவமைத்திட உரிமை பெற்றவர்கள் அல்லவே. தலைமை பதவிகளில் வியாபாரம், அரசியல் என எதுவாக இருந்தாலும் பெண்களின் பங்களிப்பு அவசியம். ஏனெனில் மனித இனத்தின் நளினமான தன்மை பெண்கள்தான்.

### அர்த்தநாரி

உயிர் பிழைத்து இருப்பதே பெரிய போராட்டமாக இருந்த சூழ்நிலைகளால், நீண்ட காலமாகவே மனிதஇனம் ஆண் தன்மைக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. தங்கள் பிழைப்பை உறுதி செய்து கொண்டு பாரம்பரியம், நாகரீகம் என மலரும் சமூகத்தில் தான் பெண்மை தனக்குரிய இடத்தை அடைய முடியும். பரவலாக சமூகங்கள் இன்று இந்நிலையை அடைந்து வருகின்றன. ஆனால் நமது உயிர் பிழைக்க வேண்டும் என்ற உள்ளுணர்வை சற்றே தளர்த்திக் கொள்ளவதற்கு பதிலாக, அதற்கான அளவுகோலை கொடுமையான அளவுக்கு உயர்த்திக் கொண்டே செல்கிறோம். முன்பு பிழைப்பு என்பது மூன்று வேளை உணவாக இருந்தது. ஆனால் இன்று பிழைப்பு என்றால் பென்ஸ், டீஆறு என்றாகிவிட்டது. இது இப்படியே தொடர்ந்தால் சமூகத்தில் பெண்மைக்கான இடமே இருக்காது. பிழைத்திருக்க வேண்டும் என்ற உள்ளுணர்வை நாம் சற்றே தளர்த்திக் கொள்ளும் போது பெண்மை இயல்பாகவே முக்கியத்துவம் பெறுவதை பார்க்க முடியும்.

ஆண் தன்மை, பெண் தன்மை என்பது உடலளவில் ஆணாகவோ பெண்ணாகவோ இருப்பதை குறித்து அல்ல. பெண்ணிடம் இருப்பது போலவே பெண்தன்மை ஒரு ஆணிடமும் உயிர்ப்புடன் இருக்க முடியும். இவை இரு விதமான தன்மைகள் மட்டுமே. இந்த இரு தன்மைகளும் சமமாக நிகழும் நிலையில் தான் ஒரு மனிதர் பரிபூரணமான வாழ்வை வாழ முடியும். ஆண்தன்மையை ஒரு மரத்தின் வேராக பார்த்தோமானால், மலரும் கனியும் பெண்தன்மை என உருவகம் கொள்ளலாம். வேர் வாழ்வதே மலரும் கனியும் பூத்துக் குலுங்கத்தான். இது நிகழவில்லை என்றால் வேர் இருப்பதே வீணாகும். பிழைத்திருத்தல் மட்டுமே எல்லாமும் ஆகிவிடுவதில்லை. பிழைப்பை பார்த்துக் கொண்டபிறகு வாழ்வின் மென்மையான நளினமான பக்கங்களும் உங்கள் வாழ்வில் நிகழ வேண்டும் தானே.

இன்று, வெற்றிகரமாக இருப்பது என்றால் அவரவரது தனிப்பட்ட லட்சியத்தை அடைவது எனமக்கள் நினைக்கிறார்கள். இது முட்டாள்தனம். லட்சியத்தை அடைய வேண்டும் என்று தீ பிடித்தது போல ஓடாமலே வெற்றிகரமாக வாழ வழி உள்ளது. உங்களை சுற்றியுள்ள அனைத்தின் மீதும் உங்களுக்கு அக்கறை இருக்குமானால், நீங்கள் எதற்கும் தயங்க மாட்டீர்கள், இயல்பாகவே உங்களில் சிறப்பாக செயல்படுவீர்கள். இதுவே பெண்கள் செயல் புரியும் விதம். இதுவே இந்த பூமியில் செயல்பட வேண்டிய விதமும் கூட.

ஆண்தன்மை, இங்கே இப்போது என்ன இருக்கிறது என்பதில் பெரிதும் கவனமில்லாமல் எங்கேயாவது செல்லும் இயல்புடையது. பெண்தன்மை எங்கேயும் செல்ல முயற்சிப்பது இல்லை. இருக்கும் நிலையிலே மகிழ்ச்சியாக இருக்கும் இயல்புடையது. இந்த இரு தன்மைகளும் சமநிலையில் இருக்கும் போது, நாம் எங்கேயாவது செல்ல முடிகிற அதே நேரத்தில், இப்போது இருக்கும் நிலையிலும் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும். இன்று உலகில் நிகழ வேண்டியதும் இது தான்.

# உறங்கி உயிர்க்கும் அரக்கச்செடி



லதா கந்தையா

நட்சத்திரம் போன்ற வெண்ணிறமான சிறிய பூக்கள். கொத்தமல்லி இலைகள் போன்ற தோற்றம். மூன்று தொடக்கம் 4 அடி வளரச்சி. பூக்கும் தாவரம். பெயர் பார்த்தீனியம். இது ஆழமாக வேரோடி நிலத்தில் பற்றி படர்ந்து ஐப்பசி மாதம் கார்த்திகை மாதங்களில் அதிகம் வளரக்கூடியது. இந்த தாவரம் 2000 தொடக்கம் 5000 வகையான வித்துக்களை உற்பத்தி செய்யக்கூடிய வல்லமை கொண்டது. காற்றின் மூலம். வேகமாக பரவி வளரக்கூடிய சக்தி வாய்ந்தது . இவ்வாறு மினுமினுக்கும் பளபளப்பும் கொண்ட இந்த பாத்தினிய செடி ஒரு கொடிய களை வகையைச் சேர்ந்ததாகும். களை என்றால் ஒரு நிலத்தில் விவசாயத்தில் ஈடுபடும் நபர் ஒருவர் தான் விரும்பி நடாத பயிராகும்.

இந்தப்பயிர் எங்கள் நாட்டின் சொந்த பயிர் அல்ல. கண்டம் விட்டு கண்டந்தாவி வந்த ராட்சத களைப் பயிர்.

பாஞ்சியாக் கண்டமென்று ஒருமித்திருந்த இந்த உலகம் கண்டத் தட்டு நகர்வுகளால் பிளவுண்ட பின்னர் எஞ்சி இருக்கும் கண்ட துண்டுகளில் இரண்டாவது பெரிய துண்டான வட அமெரிக்கா கண்டத்தினை பூர்விகமாகக் கொண்ட அரக்கச் செடி ஆகும். வட அமெரிக்காவில் இருந்த இந்த செடி எவ்வாறு இலங்கைக்கு வந்தது? வந்ததால் என்ன விளைவுகள் ஏற்பட்டது? என்ன விளைவுகளை எதிர் நோக்குகின்றது? என்பதே இங்கு ஆராயப்படுகிறது.

**இப்படித்தான்1987-ல்இந்திய இராணுவம், "அமைதிப்படை" என்ற பெயரிலே இலங்கைக் குள் காலடி எடுத்து வைத்தது. இவ்வாறு வருகை தந்த இரா ணுவத் தினருக்கு உணவாக செம்மறியாடுகள் கொண்டு வரப்பட்டன. இத்தச் செம்மறி யாடுகளின் தோல்களிலும் அவை உண்டு வயிற்றில் காவிவந்த பாத்தினியம் செம்மறிகளின் புழுக்கைகளாக வெளியேறி , பாத்தினியம் இலங்கையில் பரவலாயிற்று.**

இரண்டாம் உலகப்போரின் போது ஏற்பட்ட கொடிய பஞ்சம் காரணமாக எமது அயல்நாடான இந்தியா வட அமெரிக்காவிடம் இருந்து கோதுமையை இறக்குமதி செய்தது. இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை தானியத்தோடு நெல்லுக்குள் புல்லுக்கட்டை இருப்பது போல, கோதுமைத்தானியத்துக்குள் கலந்து பார்த்தீனியம் விதைகளும் இந்தியாவை வந்தடைந்தன. அவை இந்தியாவை போகமாக ஆக்கிரமித்தும் இருந்தன. இந்தியாவின்விளைநிலங்களைநிலங்களில், இந்தியாவின் வேளாண்மையில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது . இந்தியாவின் விளை நிலங்களுக்குள் பெருமளவு சேதத்தையும், விளைவு பொருட்களின் தரத்திலே மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. மட்டுமன்றி கால்நடைகளையும் விலங்குகளையும் மனிதர்களையும் இது பெருமளவு தாக்கத்துக்கு உள்ளாக்கி கொண்டிருந்தது.. இந்த ஆக்கிரமிப்பினால் இந்தியாவின் கால்நடைகள் மட்டுமின்றி அவற்றின் உற்பத்தி பொருட்களும் நச்சுத்தன்மை கொண்டதாக. நுகரப்படலாயிற்று. இந்த களைப்பயிர் பசுக்களின் பாலின் தரத்தை குறைக்க செய்தன. ஆடுகளும் செம்மறிகளும் கூட இவற்றை உணவாக உட்கொண்டன. இதனால் இவற்றை உண்ட மனிதர்களின் உடல்களிலும் மாற்றங்களும் விளைவுகளும் நோய்களும் ஏற்பட தொடங்கியது. கால்நடைகளுக்கு மட்டுமின்றி மனிதர்களுக்கும் அசௌகரிகத்தை ஏற்படுத்தும் கொடிய அரக்கச்செடியாக இது இனங்காணப்பட்டது.

இந்தச் செடியின் மகரந்தங்கள் காற்றில் கலப்பதால், சுவாசக் கோளாறுகள், ஆஸ்துமா ,சொறி குருதிச்செவ்வணு குறைவடைதல்என மனித குல வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் அச்சுறுத்தலாக விளங்கத் தொடங்கியது.

பால்தரும்பசுக்கள் இதனை உண்ணும் போது பாலின்தன்மை ஒருவித நச்சுத்தன்மை கொண்டதாக மாறுகிறது. என குறிப்பிட்டு இருந்தேன். இதனால் உள்நாட்டு பாலை அருந்தாது வெளிநாட்டு இறக்குமதிப்பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களை நுகரத்தொடங்கினர் மக்கள். இதனால் உள்நாட்டு கால்நடை வளர்ப்பு வீழ்ச்சி கண்டது. உள்நாட்டில் பரவிய விச்செடியை அழிப்பதில் முனைப்புக்காட்டாது வெளிநாட்டு நுகர்வை விரும்பினர். ஆனால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பதணிடப்பட்டபால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திப்பொருட்களிலே ஆபத்து காத்திருக்கிறது. வட அமெரிக்காவில். ரொக்கி அந்தீஸ் மலை தொடர்களிலே மந்தை வளர்ப்பு சிறப்பு பெற்று வழங்குகின்றது. இந்தப் பாற் பொருள்களை அதிகளவு இலங்கையர்களும் நுகர்கிறார்கள். ஆகவே இதன் தாக்கம் அந்தப்பொருட்களிலே இல்லை என முற்று முழுதாக மறுத்து விட முடியாது. மட்டுமன்றி மந்தைகளின் சாணத்தின் மூலமாக இந்தச் செடியின் வித்துக்கள் பரவலடைகின்றன மந்தைகளின் தோல்களின் மீதும் பற்றி படந்து





இவை பரவுகின்றன.

இப்படித்தான் 1987-ல் இந்திய இராணுவம் , "அமைதிப்படை" என்ற பெயரிலே இலங்கைக்குள் காலடி எடுத்து வைத்தது. இவ்வாறு வருகை தந்த இராணுவத்தினருக்கு உணவாக செம்மறியாடுகள் கொண்டுவரப்பட்டன. இத்தச் செம்மறியாடுகளின் தோல்களிலும் அவை உண்டு வயிற்றில் காவிவந்த பாத்தினியம் செம்மறிகளின் புழுக்கைகளாக வெளியேறி , பாத்தினியம் இலங்கையில் பரவலாயிற்று.

இந்த செம்மறி ஆடுகள் கொண்டு வந்த பாத்தீனியத்தின் விளைவால், வடபகுதிக்கு பெரும் அச்சுறுத்தலானது. வவுனியா, கிளிநொச்சி, மன்னர், முல்லைதீவு, யாழ்ப்பாணம் என இதன் தாக்கம் அதிகரித்த விளைநிலங்களை பெரும் பாடுபடுத்த தொடங்கியது. குறிப்பாக வவுனியாவில் மட்டும் 200 ஹெக்டேயர் விவசாய நிலங்கள் பாதிப்படைந்து இருக்கின்றன. அதிகளவான மக்களுக்கு சரும நோய்களை ஏற்படுத்தி இருக்கின்றது. ஆஸ்துமாவை ஏற்படுத்திருக்கின்றது சுவாசம் தாழ்ந்த நோய்களை ஏற்படுத்தியிருக்கின்றது இதன் மகரந்த மணிகள் காற்றோடு பரவுவதே இதற்கான காரணங்களாக கருதப்படுகின்றது.

இன்றும்இந்த கொடியதாவரசெடிவடக்கை தாக்கிக்கொண்டுதான் இருக்கின்றது. யாழ்ப்பாணத்திலும்விவசாய நிலங்களுக்குள் அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றது. தாவடி மருதனார் மடம் சுன்னாகம் மல்லாகம் ஆவரங்கால் புத்தூர் நீர்வேலி, வட்டுக்கோட்டை, அராலி, காரைநகர் என வீதியின் பக்கங்களிலேயும் விளை நிலங்களுக்குள்ளும் மழைக்கால காளான்கள் போல முளை கொண்டு நிற்பதை காண முடியும் மட்டுமின்றி யாழ்ப்பாணத்தின் மழை ஆறான வழுக்கையாறு பாய்ந்தோடும்வாய்க்கால்கள், வடிகால்களின் பக்கமாகவும் இந்த களைச்செடியிருப்பதை காணமுடியும்அதுமட்டுமின்றி கைவிடப்பட்ட காணிகள், கவனிப்பாறற்ற காரணிகள் , பற்றைமண்டிய காணிகள் , வண்ணார் பண்ணை வடிகால்கள், கொக்குவில் வடிகால்கள், திருநெல்வேலி , நாவற்குளி, தீவகப்பகுதிகள், வடமராட்சி, தென்மராட்சி என உறங்கி உறங்கி உயிர் கொண்டு எழுகின்றது.

இந்தச் களைச்செடி பயிர்களுக்கு பாய்ச்சும் நீரினை அதிக அளவு உறிஞ்சி, தன்னைச் செழிப்பாக்கிக் கொள்ளும்இயல்புகொண்டது. இந்தக் களைச்செடி எந்த நாட்டில் இருந்து இங்கு வந்து சேர்ந்ததோ அந்த நாட்டின் இயல்போடு தான் இருக்கின்றது. இவ்வாறு பயிர்களுக்கு பாய்ச்சும் நீரினை உறிஞ்சிக் கொள்வதால் செழித்து வளரும் இதன் வேர்களில். உள்ள ஆக்ரோஷன் என்ற ஒருவகை விஷத்தன்மையால் பயன்பெறும் விளைச்சல்கள் பாதிப்படைகின்றன. விளைநிலமும் பாதிப்படைகின்றது இது ஒரு அச்சுறுத்தலான விடயமாக தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

ஆனாலும் வட அமெரிக்காவில் சிகரில்லா அப்பாச்சி இன மக்கள் இந்தச்செடியை மருந்தாக பயன்படுத்துகிறார்களாம். மட்டுமன்றி

இரண்டாம் உலகப்போரின் போது ஏற்பட்ட இறப்பர் தட்டுப்பாடு காரணமாக இந்தச்செடியைப் பயன்படுத்தி இறப்பரை உற்பத்தியும் செய்திருக்கிறார்கள் ஆனால் இது ஒரு ஆரோக்கியமான செடி அல்ல.

வட அமெரிக்காவைப் போல இலங்கை பெரிய. கண்டமும் அல்ல. யாழ்ப்பாணம் பெரிய தீபகற்பமும் அல்ல விசாலமான நிலப்பரப்பை உடையதும் அல்ல , ஆனாலும். இலங்கையின் மொத்த பரப்பளவான 65 ஆயிரத்து 610. சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பின் தலைப்பகுதியில் இந்த யாழ்ப்பாணம் அழகிய நிலப்பரப்பாக காணப்படுகிறது. வளமான மண்ணையும் சுண்ணக்கல்பாறைப் பரப்பிலும் நன்னீர் வளத்தை கொண்ட ஒரு நிலப்பகுதியாகும். நன்னீசெளித் திருக்கும் இடங்களில் எல்லாம் நல்ல மண் வளத்தையும் கொண்டிருக்கின்றது. இந்த குட்டி தீபகற்பத்துக்குள் பெருமளவான வசதி வாய்ப்புகள் மலிந்தும் காணப்படுகின்றன. ஆகவே இருக்கும் வளங்களையும் நிலங்களையும் நீர்நிலைகளையும் பாதுகாக்க வேண்டியது எமது கடமை. இந்தப்பாத்தினிய களை நீயும் இருபது ஆண்டுகள் உறங்கு நிலையில் இருந்து மீண்டும் தழைக்கும் இயல்பு கொண்டது ஆகவே இதனை காணும் போது சுற்றுச்சூழல். அக்கறையோடு, சொந்த மண்ணில் எமது சந்ததிகள் இனிய கனவுகளோடு வாழ வேண்டும் என்ற அக்கறையோடு, இந்த களைச்சொடிகளை பூக்கும்முன்னரே அழிக்கும்நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். இது எமது மண்ணுக்கும் எமது சந்ததிக்கும் நாம் செய்யும் உயரிய கடமை ஆகும். இதுநமது கடமை மட்டுமல்ல உரிமையும் ஆகும். ஒவ்வொரு ஐப்பசி கார்த்திகை தை மாதங்களிலேயே இந்த பாத்தினிய செடி முளை கொண்டு வளர தொடங்கும். ஆகவே எமது சுற்றுச்சூழலை நாம்அக்கறையோடு பேணி எமது சந்ததிக்கு பரிசளிப்போம்.



# வெற்றிலை

பூரணி

**வெற்றிலைப்பொடி, புதிதாகக் கண்டறியப்பட்ட வகை 2 நீரிழிவு நோயாளிகளுக்கு இரத்த சர்க்கரை அளவைக் குறைக்கும் திறன் கொண்டது என்று பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வெற்றிலை ஒரு வலுவான ஆன்டிஆக்ஸிடன்ட் ஆகும், இது ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்தை எதிர்த்துப் போராட உதவுகிறது மற்றும் கட்டுப்பாடற்ற இரத்த குளுக்கோஸ் காரணமாக ஏற்படும் அழற்சியைக் குறைக்க உதவுகிறது மற்றும் நீரிழிவு நோயை நிர்வகிக்க உதவுகிறது.**



வெற்றிலை என்பது பிப்பரேசியா குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கொடி வகையாகும்,

பலர் பலமான விருந்துக்குப் பிறகு வெற்றிலை போடுவர், சிலர் அடிக்கடி வெற்றிலைப்போடுவதை ஒரு பழக்கமாகவே வைத்திருப்பர். மத சடங்குகளின் போது வெற்றிலை குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடிக்கிறது.

இங்கே, திருவிழாக்கள் மற்றும் பண்டிகைகளின் போது, கடவுளுக்கு வெற்றிலைப் படைக்கப்படுகிறது மற்றும் மரியாதைக்கான அடையாளமாக வயதானவர்களுக்கும் வெற்றிலைக் கட்டு கொடுக்கப்படுகிறது. இந்த பளபளப்பான, இதய வடிவிலான இலைகளில் மறைந்துள்ள பெரிய அளவிலான ஆரோக்கிய நன்மைகளை நாம் பெரும்பாலும் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறோம்.

### தோஷங்கள் மீதான விளைவு:

வெற்றிலைகள் அபரிமிதமான சிகிச்சை ஆற்றலைக் கொண்டுள்ளன,

வெற்றிலையின் ஆரோக்கிய நன்மைகள்:

### வலி நிவாரணி

வெற்றிலை ஒரு சிறந்த வலி நிவாரணி, இது வலியிலிருந்து உடனடி நிவாரணம் அளிக்கிறது. வெட்டுக்கள், சிராய்ப்புகள், சினப்புகள் காரணமாக ஏற்படும் வலியைப் போக்க இதைப் பயன்படுத்தலாம். கொழுந்து வெற்றிலையை பேஸ்ட் போல அரைத்து, பாதிக்கப்பட்ட இடத்தில் தடவுங்கள். வெற்றிலை சாறு உடலின் உள்ளே ஏற்படும் வலிகளுக்கு நிவாரணம் அளிக்கிறது.

மலச்சிக்கலைப் போக்குகிறது

வெற்றிலைகளில் உடலில் இருந்து ரேடிக்கல்களை அழிக்கும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன. இது உடலில் சாதாரண ºஉ அளவை மீட்டெடுத்து, வயிற்றுக் கோளாறை சரிசெய்ய உதவுகிறது. மலச்சிக்கலில் இருந்து நிவாரணம் பெற வெற்றிலை சாப்பிடுவதை ஆயுர்வேதம் பரவலாக பரிந்துரைக்கிறது. வெற்றிலையை நசுக்கி இரவில் தண்ணீரில் போடவும். காலையில் வெறும் வயிற்றில் அந்தத் தண்ணீரைக் குடிக்கவும். இவ்வாறு செய்தால் மலச்சிக்கல் சரியாகும்.

### செரிமானத்தை மேம்படுத்துகிறது

பலமான விருந்துக்குப் பிறகு ஏன் வெற்றிலையை மென்று சாப்பிட வேண்டும் என்று எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? அதன் இரைப்பைக் குடல் காற்று நீக்கி (கார்மினேடிவ்), வாயு எதிர்ப்பு மற்றும் குடலைப்பாதுகாக்க உதவும் பண்புகளுக்காக இது பரிந்துரைக்கப்படுகிறது. வெற்றிலைகள் வளர்சிதை மாற்றத்தை அதிகரித்து, இரத்த ஓட்டத்தைத் தூண்டுகிறது மற்றும் முக்கிய வைட்டமின்கள் மற்றும் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுவதற்கு குடலைத் தூண்டுகிறது.

சுவாச பிரச்சினைகளைக் குறைக்கிறது

இருமல் மற்றும் சளி தொடர்பான பிரச்சினைகளுக்கு வெற்றிலை பரவலாக உதவுகிறது. மார்பு, நுரையீரல் அடைப்பு மற்றும் ஆஸ்துமாவால் அவதிப்படு பவர்களுக்கு இது ஒரு சிறந்த மருந்து. வெற்றிலையில் சிறிது கடுகு எண்ணெயைத் தடவி சூடாக்கி மார்பில் வைத்தால் நெஞ்சு சளி குணமாகும். நீங்கள் சிறிது இலைகளைத் தண்ணீரில் கொதிக்க வைத்து, இரண்டு கப் தண்ணீரில் ஏலக்காய், கிராம்பு மற்றும் இலவங்கப்பட்டை சேர்த்து, இதை 1 கப் அளவு வரும்வரை காய்ச்சவும். நெஞ்சு சளி மற்றும் சுவாசப் பிரச்சனைகளில் இருந்து சிறந்த நிவாரணம் பெற இந்தக் கலவையை ஒரு நாளைக்கு இரண்டு முதல் மூன்று முறை பருகுங்கள்.

### ஆன்டிசெப்டிக் மற்றும் பூஞ்சை எதிர்ப்பு பண்புகள்

வெற்றிலையில் அற்புதமான ஆன்டிசெப்டிக் பண்புகள் உள்ளன, ஏனெனில் அவற்றில் பாலிபினால்கள் நிறைந்துள்ளன, குறிப்பாக அதில் உள்ள சாவிகோல் கிருமிகளிலிருந்து இரட்டைப் பாதுகாப்பை வழங்குகிறது. இது கீல்வாதம் மற்றும் விரையழற்சி சிகிச்சையிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இதன் அற்புதமான பூஞ்சை எதிர்ப்பு பண்புகள் பூஞ்சை தொற்றுகளில் இருந்து



உடனடி நிவாரணம் அளிக்கிறது. வெற்றிலையின் பேஸ்ட்டைத் தடவினால் பாதிக்கப்பட்ட பகுதியில் பூஞ்சை தொற்று அழிக்கப்படுகிறது.

வாய் ஆரோக்கியத்தை பராமரிக்கிறது

வெற்றிலையில் ஏராளமான ஆன்டிமைக்ரோபியல் ஏஜென்டுகள் உள்ளன, அவை வாயில் துர்நாற்றத்தைத் தூண்டும், அத்துடன் துவாரங்கள், பிளேக் மற்றும் பல் சிதைவு போன்ற சிக்கல்களை ஏற்படுத்தும் பல பாக்டீரியாக்களைத் திறம்பட எதிர்த்துப் போராடுகின்றன. உணவுக்குப் பிறகு சிறிதளவு வெற்றிலையை மென்று சாப்பிடுவதால் குடல் ஆரோக்கியம் மேம்படுவதோடு, வாய் துர்நாற்றம், பல்வலி, ஈறு வலி, வீக்கம் மற்றும் வாய்வழி தொற்றுகள் நீங்கும்.

**மூட்டு வலியைப் போக்குகிறது**

வெற்றிலையில் அழற்சி எதிர்ப்புப் பண்புகள் நிறைந்துள்ளன. இது முடக்கு வாதம், ஆஸ்டியோபோரோசிஸ் போன்ற பல நாள்பட்ட பலவீனப்படுத்தும் நோய்களின் முக்கிய அறிகுறிகளான மூட்டுகளில் ஏற்படும் அசௌகரியத்தையும் வலியையும் வெகுவாகக் குறைக்கிறது. பாதிக்கப்பட்ட எலும்புகளிலும் மூட்டுகளிலும் ஏற்படும் வலியின் தீவிரத்தைக் கணிசமாகக் குறைக்கிறது, அந்தப் பகுதியில் வீக்கத்தையும் கீல்வாத அறிகுறிகளையும் குறைக்கிறது.

**நீரிழிவு நோயை நிர்வகிக்கிறது**

வெற்றிலைப் பொடி, புதிதாகக் கண்டறியப்பட்ட வகை 2 நீரிழிவு நோயாளிகளுக்கு இரத்த சர்க்கரை அளவைக் குறைக்கும் திறன் கொண்டது என்று பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வெற்றிலை ஒரு வலுவான ஆன்டிஆக்ஸிடன்ட் ஆகும், இது ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்தை எதிர்த்துப் போராட உதவுகிறது மற்றும் கட்டுப்பாடற்ற இரத்த குளுக்கோஸ் காரணமாக ஏற்படும் அழற்சியைக் குறைக்க உதவுகிறது மற்றும் நீரிழிவு நோயை நிர்வகிக்க உதவுகிறது.

**புற்றுநோயைத் தடுக்கிறது**

வெற்றிலையை புகையிலை மற்றும் பாக்குடன் எடுத்துக் கொண்டால் வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கான அபாயம் அதிகரிக்கும். இருப்பினும், வெற்றிலையை மட்டும் சாப்பிடுவதால் நன்மைகள் ஏற்படும். ஏனெனில், வெற்றிலையில் ஆக்ஸிஜனேற்ற எதிர்ப்பு, பிறழ்வு எதிர்ப்பு மற்றும் பெருக்க எதிர்ப்பு பண்புகளைக் கொண்ட மதிப்புமிக்க பினாலிக் கலவைகள் நிரம்பியுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இவை தவிர, வெற்றிலையில் புற்றுநோயை எதிர்த்துப் போராடக்கூடிய பைட்டோகெமிக்கல்களும் உள்ளன.

மனச்சோர்வை எதிர்த்துப் போராடுகிறது

மத்திய நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டைத் தூண்டும் இயற்கை மருந்தாக பல ஆண்டுகளாக வெற்றிலை பயன்படுத்தப்படுகிறது. வெற்றிலையில் உள்ள நறுமண ஃபீனாலிக் கலவைகள் கேடகோலமைன்களின் வெளியீட்டைத் தூண்டுகிறது, இது உடல்நலனையும் மனநலனையும் மேம்படுத்துகிறது. எனவே வெற்றிலையை மட்டும் மென்று சாப்பிடுவது மன அழுத்தத்தைப் போக்க ஓர் எளிய வழியாகும்.

**அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்**

**வெற்றிலையை மென்று சாப்பிடுவது நல்லதா?**

வெற்றிலையை மெல்வதால் உடலுக்குப் பல நன்மைகள் கிடைக்கிறது. ஆரோக்கிய உணர்வு, அதிக விழிப்புணர்வு, வியர்வை மற்றும் உமிழ்நீர் சுரப்பும் அதிகரிக்கும். பல ஆரோக்கியத்திற்கு ஏற்ற பண்புகளையும் கொண்டுள்ளது. வெற்றிலையை மெல்லுவது முடி மற்றும் சரும ஆரோக்கியத்திற்கும் பயனளிக்கும்.

**வெற்றிலை சாப்பிடுவதால் முடிக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன?**

வெற்றிலையைத் தொடர்ந்து பயன்படுத்துவது முடி வேகமாக வளர உதவுகிறது. வெற்றிலையைத் தொடர்ந்து பயன்படுத்தினால், முடி உதிர்வு பிரச்சனைகளுக்குத் தீர்வு காணலாம். மேலும், அவை முடியின் பொலிவை அதிகரிப்பதோடு, முடி அடர்த்தியாகவும் நீளமாகவும் வளரவும் உதவுகிறது. வெற்றிலையின் சிகிச்சை பண்புகள் அரிப்பு, பொடுகு மற்றும் தலைமுடி வெடிப்புகளுக்குச் சிகிச்சையளிக்க உதவுகிறது.

**சருமத்திற்கு வெற்றிலை நல்லதா?**

ஆன்டிமைக்ரோபியல் பண்புகளைக் கொண்ட வெற்றிலை, சொறி, முகப்பரு, அரிப்பு மற்றும் உடல் துர்நாற்றம் போன்ற தோல் கோளாறுகளுக்கு இயற்கையான சிகிச்சை முறையாக அமைந்துள்ளது. இந்த இலைகள் சருமத்துளைகளுக்குள் மறைந்திருக்கும் அழுக்குகளை வெளியேற்றி சருமத்தை சுத்தப்படுத்தவும், ஒவ்வாமைகளை எதிர்த்துப் போராடவும் உதவுகிறது. மேலும் மென்மையான, மிருதுவான மற்றும் பளபளப்பான சருமத்தை வழங்குகிறது.

**வெற்றிலையில் என்ன வைட்டமின்கள் உள்ளன?**

வெற்றிலையில் விட்டமின் பி, விட்டமின் சி, நியாசின், ரிபோஃப்ளேவின் மற்றும் கரோட்டின் போன்ற வைட்டமின்கள் உள்ளன. இந்த இலைகளில் பிற தாதுக்களும் கல்சியமும் நிறைந்துள்ளன.



# சூழலுக்கு இசைவான சோளம் பயிர் செய்கை

**தீவிர வேளாண்மை முறையில் நெற்பயிர் அதிகமாக விளைவிக்கப்படும். விளைநிலம் சிறியதாக இருந்தாலும் அவற்றில் விவசாயிகள் தீவிர வேளாண்மை செய்வர். வணிக வேளாண்மை பரந்த வேளாண்மை எனப்படுகிறது. இவ்வகையில், பயிர்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. பயிரிடுவதற்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.**

க.அமுதன்–கீரிமலை




சோளத்தில் உள்ள பல்வேறு வகைகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் குறித்து, மாவட்ட வேளாண் உழவர் பயிற்சி மையம் தெரிவித்துள்ளது. சோளம் என்பது புல்வகையைச் சேர்ந்த பல இனங்களை உள்ளடக்கிய தாவரப் பேரினம். இவற்றில் சில தானியங்களுக்காகவும், வேறுசில கால்நடைத் தீவனங்களுக்காகவும் பயிரிடப்படுகின்றன. சில வகைகள் மேய்ச்சல் நிலங்களில் இயற்கையாக வளர்கின்றன.

இப்பயிர் உலகம் முழுதும் மிதமான வெப்பம் கொண்ட பகுதிகளில் பயிராகின்றன. இவ்வினங்கள், எல்லாக் கண்டங்களையும் சேர்ந்த வெப்பவலய, குறை வெப்பவலயப் பகுதிகளையும், தென்மேற்கு பசிபிக், ஆஸ்திரேலியா பகுதிகளையும் தாயகமாகக் கொண்டவை. இது சிறு தானியப் பயிராகும்.

அரிசி, கோதுமைக்கு அடுத்தபடியாக சோளம் முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. சோளத்தை முழுதாகவோ, உடைத்தோ வேகவைத்து அரிசிபோன்றும், அரைத்து மாவாகவும் உணவுப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. சோளம் நொதித்தல் தொழிற்சாலை, எரிசாராயம், கரைப்பான் தொழிற்சாலைகளில் மாவுச்சத்துப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

வெள்ளைச் சோளம் அரிசியைப் போன்ற தன்மையையும் அதைவிடப் பல சத்துகளையும் கொண்டது. சோளத்தில் உடலுக்கு அவசியமான புரதம், இரும்பு, கால்சியம், கொழுப்பு, நார்ச்சத்துகள் உள்ளன. சிறுதானியங்களில் குறைந்தளவே குளுக்கோஸ் இருப்பதால், அவை மனிதனை சர்க்கரைநோயிலிருந்து காப்பாற்றக்கூடியவை.

## சிவப்பு சோளம்

இவ்வகைச் சோளம் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உணவாகப் பயன்படுகிறது. பெரும்பாலும் தென் ஆப்பிரிக்காவில் விளைவிக்கப்படும் இந்தச் சோளம், தற்போது மழை குறைவாகப் பொழியும் அனைத்து நாடுகளிலும் விளைவிக்கப்படுகிறது. இது 4 மீட்டர் உயரம் வரை வளரும். 3 முதல் 4 மிமீ வரை சுற்றளவு கொண்டிருக்கும். இலைகள் மருந்து, எத்தனால் தயாரிக்கப் பயன்படுகிறது.

சோளம் அனைத்துப் பகுதிகளிலும் விளைவதற்கு ஏற்றப் பயிர். சிறு வெள்ளைச்சோளமே இந்தியாவின் இயற்கைச் சோளம். மக்காச்சோளத்தின் உற்பத்தியில் தற்போது இந்தியா உலகில் 5ஆவது இடத்தில் உள்ளது. மக்காச்சோளம் தென் அமெரிக்காவிலிருந்து வந்த பயிர் ஆகும். சிறுசோளமும், மக்காச்சோளமும் இந்தியாவின் பாரம்பரியப் பயிர்கள்.

2011இல் சோளத்தின் உற்பத்தி நைஜீரியாவில் 12.6மூ, இந்தியாவில் 11.2மூ, மெக்ஸிகோவில் 11.2மூ, அமெரிக்காவில் 10மூ ஆகும். சோளம் பரவலான வெப்பநிலையில், அதிக உயரத்தில் வளரும். நச்சு மண்களிலும், மிகவும் வறட்சியிலும், பசிபிக் பகுதியிலும்கூட விளையும்.

## சாகுபடி முறை

சோளத்தை ஆண்டுக்கு ஒருமுறை ஆடிப் பட்டத்தில் சாகுபடி செய்யலாம்.

மானாவாரி நிலங்களில் சித்திரையில் உழுது, மண்ணை ஆறப்போட்டு, ஆடியில் மழை கிடைத்ததும், விதைத்து, நிலத்தை உழவேண்டும்.

ஆவணியில் களையெடுக்க வேண்டும். வேறு பராமரிப்பு தேவையில்லை. விளைச்சலைப் பொறுத்து, மார்கழி கடைசிக்குள் அறுவடை செய்துவிட வேண்டும்.

நன்றாக விளைந்த சோளம், முற்றி, சிறிய அளவில் வெடித்து, அரிசி வெள்ளையாக வெளியே தெரியும்போது அறுவடை செய்யலாம்.

நிலத்திலிருந்து அரையடி விட்டு, தட்டையை அறுத்து, கதிர்களை தனியாக அறுவடை செய்ய வேண்டும்.

பயன்கள்

அமெரிக்காவில் மற்ற தானியங்களைவிட சோளமே அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இதில் அதிக மாவுச்சத்து, கொழுப்பு, புரதம் உள்ளதால் சத்தான உணவாகக் கருதப்படுகிறது. உணவுக்காக மேலைநாடுகளில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. மக்காச்சோள அவல் பெரும்பாலும் காலைச் சிற்றுண்டியாகப்



பயன்படுத்தப்படுகிறது.

வளர்ந்த நாடுகளில் கால்நடைத் தீவனமாகவும் சோளம் பயன்படுகிறது. கஞ்சி சர்க்கரை (சோளச் சர்க்கரை, டெக்ஸ ரின்) காகன் சிரப் தொழில், ஆல்கஹால் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது.

சோள உணவுகள் உடலுக்கு உறுதி அளிக்கவல்லவை. உடல் பருமனைக் குறைக்கும், வயிற்றுப்புண்ணை ஆற்றும். வாய் நாற்றத்தைப் போக்கும். சோளம் பால் உற்பத்தியை அதிகரிக்கும். சோளக்கழிவுகள் கறவை மாடுகளுக்குத் தீவனமாகப் பயன்படுகின்றன. சோளம் உயிரி எரிபொருள் தயாரிப்புக்குப் பயன்படும் முக்கிய பொருளாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சோளப்பயிர்ச் செய்கையினை முன்னேற்றுவதற்காக மத்திய அரசின் தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் “மறுவயற் பயிர் சோளத்தின் உற்பத்தியினையும், உற்பத்தித்திறனையும் முன்னேற்றுதல்” நிகழ்ச்சித்திட்டத்தில் வடமாகாண விவசாயத்திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனையினால் பத்து சோளப்பயிர்ச்செய்கை முன்மாதிரித் துண்டங்கள் உடையார்கட்டு, மாணிக்கபுரம், கோம்பாவில், மந்துவில், முத்தையன்கட்டுகுளம், கணேசபுரம், ஒட்டுசுட்டான் மற்றும் அளம்பில் ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஒரு முன்மாதிரித் துண்டத்தின் விஸ்தீரணம் 01 ஏக்கர் எனும் அடிப்படையில் 10 ஏக்கர் விஸ்தீரணத்தில் இம்முன்மாதிரித் துண்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

சூழலுக்கிசைவானதும் நிலைபேறா னதுமான பல தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாக இம்மாதிரித்துண்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் உள்ளூர் கலப்பின சோள வர்க்கமாகிய ஆஜ ஆயணைந உலடிசனை 1 செய்கை பண்ணப்பட்டுள்ளது. படைப்புழு முகாமைத்துவம் உள்ளிட்ட பயிராக்கவியல் செயற்பாடுகளை இலகுவாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு இம்முன்மாதிரித் துண்டங்களில் சோளமானது நிரைகளாக பயிரிடப்பட்டுள்ளது. வரிசைகளுக்கிடையில் 2அடி இடைவெளியும் வரிசையிலுள்ள பயிர்களுக்கிடையே 1அடி இடைவெளியும் இருக்கும் வகையில் 4 சோள வரிசைகளும் ஒவ்வொரு 4 வரிசை கொண்ட சோள நிரையினை அடுத்தும் 4 அடி இடைவெளி என்ற ஒழுங்கில் அமையுமாறு பயிர்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

மழைவீழ்ச்சி அதிகம் பெறப்படும் காலபோகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முன்மாதிரிசெய்கைத் துண்டங்கள் அனைத்திலும் மண் அரிப்பைத் தடுப்பதற்கான மண் பாதுகாப்பு அணைகள் இயற்கை மூலவள முகாமைத்துவ நிலையத்தினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இம்மட்காப்பு அணைகள் அடிப்புற அகலம் 3அடி ஆகவும், மேற்புற அகலம் 2அடி ஆகவும், குத்துயரம் 1.5அடி ஆகவும், அமையும் வகையில் வயல் துண்டத்தின் அளவிற்கு ஏற்ப தேவையான நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன.

நீண்ட கால நோக்கில் தேசி, முருங்கை, மாதுளை போன்ற பல்லாண்டுப் பயிர்கள் ஒரு பயனாளிக்கு 80 கன்றுகள் வீதம் வழங்கப்பட்டு இம்மண் அணைகளின் மேல் 6-7 அடி இடைவெளியில் ஸ்தாபிக்கப் பட்டுள்ளன.


பசுந்தாட்பசளையாக பயன்படுத்தும் நோக்கில் குறித்த மாதிரித்துண்டங்களில் வீச்சு விதைப்பினை மேற்கொள்வதற்காக 1 ஏக்கர் விஸ்தீரணத்திற்கு 20 கி.கிராம் என்ற அளவில் சணல் விதை வழங்கப்பட்டது. விதைத்து 2-3 வார இடைவெளியில் சணலானது கொத்திப் புரட்டப்பட்டு மண்ணுடன் கலக்கப்படுகிறது. இதனால் சோளத்திற்குத் தேவையான நைதரசன் பசளையில் 25மூ குறைக்கப்படுகிறது. அத்துடன் முன்மாதிரிசெய்கைத் துண்டங்களை ஸ்தாபிக்க முன்னதாகவே குறித்த துண்டங்களில் மண்மாதிரிகள் எடுக்கப்பட்டு மண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மண்பரிசோதனை அறிக்கைகளின் அடிப்படையில் தேவையான உரத்தை மட்டும் சோளச்செய்கைக்குப் பயன்படுத்த செய்கையாளர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சோள நிரைகளுக்கு இடையிலான 4 அடி இடைவெளியில் காணப்படும் சணல் பயிர் மண்ணுடன் கொத்திப் புதைக்கப்பட்டதும் அவ் இடைவெளியினை பயனுள்ளதாக மாற்ற நிலக்கடலை, கௌப்பி, பயறு, போன்ற பயிர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளன.

இந்நான்கு அடி இடைவெளியானது சோளப்பயிரில் படைப்புழுத்தாக்கம் போன்ற பீடைத்தாக்கங்கள் ஏற்படின் அதனை விரைவாக இனம் கண்டு முகாமைத்துவம் செய்வதற்கு உதவியாக அமைவதுடன் சிபார்சு செய்யப்பட்ட இரசாயனங்களை முறையாக விசிறுவதையும் இலகுவாக்குகிறது. இப்படைப்புழுக்களின் நிறையுடலி அந்துப் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கும் நோக்குடன் பெரோமோன் பொறிகளும் ஆங்காங்கே நிலைப்படுத்தப் பட்டுள்ளன.

இம்முன்மாதிரித்துண்டங்களை வெற்றிகரமாகக் கொண்டு செல்வதற்கு மேற்கூறப்பட்ட அனைத்து நடைமுறைகளும் பின்பற்றப்பட்டுள்ளதுடன், கோம்பாவில் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் கர்ணன்குடியிருப்பு என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்மாதிரிச் செய்கை ஸ்தாபித்தலுக்கான வயல்விழாவும் 16.10.2019 அன்று நடாத்தப்பட்டுள்ளது. இவ் வயல்விழாவில் 32 விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். ஏனைய பகுதிகளிலும் இம்முன்மாதிரித்துண்டச் செய்கையின் அடைவினை வெளிப்படுத்தும் வயல்விழாக்கள் இடம்பெறவுள்ளன. இவ்வாறாக இந்த முன்மாதிரிச்செய்கை மூலம் படைப்புழுவின் தாக்கத்தினால் பின் தங்கியுள்ள சோளப்பயிர்ச்செய்கையினை எமது பிரதேசத்தில் மேம்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# வடக்கை வாட்டும் வரட்சி




**மிக நீண்ட நாட்களுக்கு மழையற்ற வறண்ட வானிலை நிலவுவதன் காரணமாக வடக்கு மாகாணத்தினுடைய பல பகுதிகளும் வறட்சியை அல்லது நீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்வதைக் காண முடிகின்றது.**

ச.அபிசரன்,
மூன்றாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஒரு பிரதேசத்தின் உடைய பல்வேறு விடயங்களை கட்டமைப்பதில் அந்தப் பிரதேசத்தின் இயற்கை அம்சங்கள் மிகப்பெரிய பங்கினை வகிக்கின்றன. ஒரு பிரதேசத்தின் காலநிலை சார்ந்த விடயங்கள் அப்பிரதேசத்தினுடைய இயற்கையையும் மற்றும் பொருளாதார, சமூக, கலாச்சார பண்பாட்டு விழுமியங்களையும் கட்டமைப்பதில் மிகப்பெரிய பங்களிப்பு வழங்குகின்றன. அவ்வாறான ரீதியில் வடக்கு மாகாணத்தின் பல்வேறு வகைப்பட்ட விடயங்களை தீர்மானிப்பதில் பிரதேசத்தினுடைய காலநிலை சார்ந்த விடயங்கள் மிகப்பெரிய செல்வாக்கினை பெற்றிருக்கின்றது.

அந்த வகையிலே இன்றைய மனித சமூகம் எதிர்கொள்ளுகின்ற மிக முக்கிய பிரச்சனையாக இயற்கை அனர்த்தங்களுள் ஒன்றான வறட்சியாகும். 2019 ஆம் ஆண்டின் ஐ. பி. சி. சி யின் அறிக்கை, உலகளாவிய ரீதியில் ஆண்டுக்கு சராசரியாக 42 நாடுகள் வறட்சியினால் பாதிக்கப்படுவதாக குறிப்பிடுகின்றது. அத்தோடு எல் நினோ காலநிலை புரள் செயல்பாடுகளினாலும் ஆண்டுதோறும் வறட்சி நிகழ்வுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை காண முடியும். அந்த அடிப்படையில் இலங்கையும் ஆண்டுதோறும் வரட்சியினால் பாதிப்படைந்து வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக வடகிழ் பருவ பேச்சுக்காற்று காற்று காலப் பகுதிகளில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களும் அதிக அதிக அளவு வறட்சியினால் பாதிப்படைந்து வருவதை அவதானிக்க முடியும். அந்த அடிப்படையில் வறட்சிக்கான நிலைமைகளையும் அவற்றின் பாதிப்புகளும் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் மிக உயர்வாகவே காணப்படுகின்றன. ஆண்டுதோறும் தென்மேற்கு பருவப் பெயர்ச்சிக் காற்றுக்காலப் பகுதிகளிலும் முதலாவது இடைப்பருவ காலங்களின் பிற்பகுதியிலும் இலங்கையின் வடக்கு மாகாணம் வரட்சியினால் பாதிப்படைந்து வருகின்றது.

இலங்கையின் வட பிராந்திய காலநிலை வரலாற்றின் படி அக்டோபர், நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி போன்ற சில மாதங்கள் மழை பெய்யும் மாதங்கள் ஆகும். வரலாற்றின்படி 1897 டிசம்பர் மாதம் 15ஆம் திகதி நெடுங்கேணியில் பதிவான 805.7 மி.மீ மழையே வடமாகாணத்தில் கிடைத்த ஒரே நாளில் கிடைத்த அதி கூடிய மழைவீழ்ச்சியாகும். முழு இலங்கையையும் பொறுத்தவரை ஒரே நாளில் கிடைத்த அதி கூடிய மழைவீழ்ச்சி.

பெப்ரவரி 1984 இல் முல்லைத்தீவில் அதிக மாதாந்திர மற்றும் வருடாந்த மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. வடக்கு மாகாணத்தின் வறட்சிக்கு, நீண்ட நாட்களுக்கு மழையற்ற தன்மையும் பருவத்தில் கிடைக்க வேண்டிய மழையின் குறைவான கிடைப்பனவுமே பிரதானமான காரணிகளாகும். பொதுவாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை அமைப்பைப் பொறுத்தவரை வடக்கு மாகாணம் இரண்டாவது இடைப்பருவ காலத்திலும் வடகீழ் பருவக் காற்றுக் காலத்திலுமே மழையைப் பெறுகின்றது.



காலப்பகுதிகளில் இலங்கையின் வடமேற்குப் பகுதிகளிலும் தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக் தென்மேற்கு பருவக்காற்றுக் காலத்திலும் முதலாவது இடைப்பருவக் காலத்திலும்

தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY



வெப்பச்சலனச்செயற்பாட்டினால்மாத்திரமே வடக்கு மாகாணம் குறைந்த அளவிலான மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது.

மிக நீண்ட நாட்களுக்கு மழையற்ற வறண்ட வானிலை நிலவுவதன் காரணமாக வடக்கு மாகாணத்தினுடைய பல பகுதிகளும் வறட்சியை அல்லது நீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்வதைக் காண முடிகின்றது. மழையினால் நிரப்பப்பட வேண்டிய தரைக்கீழ் மற்றும் தரை மேற்பரப்பு நீர் வளங்கள் முழுமையாக மீள் நிரப்பப்படாத காரணத்தினாலும் மீள்நிரப்புவதற்குத் தேவையான மழை வீழ்ச்சி இல்லாததன் காரணமாகவும் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளும் தென்மேற்கு மற்றும் முதலாவது இடைப்பருவ காலத்தில் வறட்சியை எதிர்கொள்கின்றன.

வறட்சிக்கான இரண்டாவது காரணமாக, அதிகரித்த பகல் பொழுது வெப்பநிலையைக் குறிப்பிடலாம். வடக்கு மாகாணத்தில் மார்ச் மாதத்தில் இருந்து செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் பகல் பொழுதின் அதிகூடிய வெப்பநிலை சராசரியாக 35 பாகை செல்சியஸ்க்கு கூடுதலாகவே காணப்படுவது வழமையாகும். குறிப்பாக மார்ச் மாதத்தின் பிற்பகுதிகளிலும் செப்டெம்பர் மாதத்தின் முற்பகுதிகளிலும் வடக்கு மாகாணத்தில் சூரியனுடைய உச்சம் கிட்டத்தட்ட 90 பாகையை அண்மித்த நிலைமையில் காணப்படுவதன் காரணமாக இந்தக் காலப்பகுதிகளில் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளும் அதிகளவு சூரிய ஒளியைப் பெறுவதோடு அதன் காரணமாக வளிமண்டல வெப்பநிலை மற்றும் மண் வெப்பநிலையினுடைய அதிகரிப்பும் உயர்வாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக பகல் பொழுதில் நிலவுகின்ற அதிகரித்த வெப்பநிலை காரணமாக இந்தப் பிரதேசங்களில் இந்தக் காலப்பகுதிகளில் வறட்சி அனர்த்தங்கள் அல்லது நீர்ப் பற்றாக்குறை நிலைமைகள் அல்லது மிகவும் வெப்பநிலையுடன் கூடிய வானிலை நிலைமைகளை அனுபவிக்கின்ற சூழலைக் காண முடிகின்றது. வடக்கு மாகாணத்தின் அதிகரித்த வறட்சி நிலைமைகளுக்கான மற்றும் ஒரு பிரதானமான காரணியாக வெப்பநிலை உயர்வாக உள்ள காலப்பகுதிகளில் நிலவுகின்ற உயர்வான ஆவியாக்க ஆவியுயிர்ப்பு விகிதத்தினைக் குறிப்பிடலாம்.

அதிகரித்த வெப்பநிலை காரணமாகவும் இக்காலப்பகுதியில்வீசுகின்ற காற்றின்வேகம் காரணமாகவும்தரை மேற்பரப்பு நீர்நிலைகள் மிக வேகமாக ஆவியாகுவதுடன், அதிகரித்த வெப்பநிலை மற்றும் அதிகரித்த காற்றின் வேகத்தினை சமாளிப்பதற்காக தாவரங்கள் அதிக அளவிலான ஆவியுயிர்ப்பை மேற்கொள்ளுவதனையும் கவனிக்க முடிகின்றது. இதன் காரணமாக அதிகரித்த ஆவியாக்கம் மற்றும் ஆவியுயிர்ப்பு நிலமைகளினால் வறட்சிக்கான நிலமைகள் தூண்டப்படுகின்றன. பெரும்பாலான வடக்கினுடைய மேற்பரப்பு நீர் நிலைகள் மற்றும் சில பகுதிகளின் (மணற் பகுதிகள்) தரைக்கீழ் நீரும் அதிகளவான ஆவியாக்கத்திற்கு உட்படுவதன் காரணமாக இந்தப் பிரதேசங்களில் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு வறட்சி நிலமைகள் தூண்டப்படுகின்றது.

வடக்கின் பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் அல்லது மிகப் பெரிய குளங்கள் திறந்த மேற்பரப்பைக் கொண்டு காணப்படுவதன் காரணமாக சூரிய ஒளி மேற்பரப்பு நீரோடு தொடர்புபட்டிருக்கின்றமையும், வளிமண்டல ஈரப்பதனில் ஏற்படுகின்ற மாற்றமும், காற்றின் வேகமும், அதிகரித்த வெப்பநிலையும் வடக்கு மாகாணத்தில் மே மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரையான காலப்பகுதிகளில் அதிக அளவிலான ஆவியாக்கத்தைத்தூண்டுவதன் காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகள்வறட்சிநிலமையை அனுபவிப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

வடக்கு மாகாணத்தினுடைய வறட்சிக்கான மற்றும் ஒரு பிரதானமான காரணியாக வடக்கு மாகாணத்தினுடைய மனித நடவடிக்கைகளை குறிப்பிட்டுக் கூறலாம். அந்த அடிப்படையில் பின்வரும் மனிதநடவடிக்கைகள்வடக்குமாகாணத்தின் வறட்சி அனர்த்த நிகழ்வுகளுக்கு அடிப்படையாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக தாவரப் போர்வைகளை மிக அதிக அளவு அகற்றுவதன் காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகள் வறட்சிக்கான நிலமையை அனுபவிப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. குறிப்பாக பல்வேறு தேவைகளின் பொருட்டு காடுகள் மற்றும் தாவர விதானங்கள் அல்லது தாவரங்கள் அகற்றப்படுவதன் காரணமாக அந்தத் தாவரங்கள் மூலம் வளிமண்டலத்துக்கு வழங்கப்படுகின்ற ஈரப்பதன் அளவு குறைக்கப்படுவதுடன் தொடர்ச்சியாக மழையற்றுப் போய் அதிகரித்த வெப்பநிலை நிலவுகின்றது. அதன் காரணமாக அந்தப் பிரதேசம் அதிக அளவிலான நீர்ப் பற்றாக்குறையை அல்லது மிக வெப்பமான வானிலையை அனுபவிப்பதோடு அது தொடர்ச்சியாக வறட்சி நிலமைக்கும் இட்டுச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

மிகுதி அடுத்த வாரம்.....

## றப்பர் பாலில் விழுந்து மறைந்த கண்ணீர் - 05

# இரு நூற்றாண்டு கால றப்பர் தோட்ட தொழிலாளர்களின் சோகக் கதை

சங்கா சிங்ஹ ஆரச்சி

‘பின்கந்தை தோட்டத்தில் றப்பர் பால் வெட்டும் தொழிலாளர்களே வாழ்கின்றனர். அத்தோட்டம் 77,81 மற்றும் 83 வன்செயல்களினால் தாக்கப்பட்டிருக்கின்றது. எனது அப்பா தோட்டத்தின் கள உத்தியோகத்தர். 77 ஆம் ஆண்டு ரவுடிகள் எமது வீட்டின் மீது தாக்குதல்நடத்தியபோது நாங்கள்காட்டுக்குள் ஓடி உயிர் பிழைத்தோம். தோட்டத்தில் வசித்த சோமபால என்ற டிரக்டர் டிரைவர் உட்பட பலர் இணைந்து தோட்டத்தின் பெண் பிள்ளையொருவரை கூட்டாக பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியிருந்தனர். இவ் அக்கிரமத்தை அனைவரும் அறிந்திருந்தாலும் முறைப்பாடு செய்வதற்கு அச்சங் கொண்டிருந்தனர். பொலிசும் குற்றவாளிகளை பாதுகாத்தன. அன்றைய நாட்களில் இதுபோன்ற பல சம்பவங்களை கேள்விப்பட்டோம். பாதுகாப்பு தருகிறோம் என்ற போர்வையில் மிகவும் திட்டமிட்டு இவ்வல்லுறவு சம்பவம் இட்ம்பெற்றது.” காலத்தால் இவ் அக்கிரமங்கள் மறைக்கப்பட்டாலும் இப்படுபாதகச் செயல்களை இன்றும் மறக்க முடியாதுள்ளதாக வருந்துகிறார் மேகலா.

கேகாலை மாவட்டத்தில் இன்றும் இனவாத போக்குகள் குறையாதுள்ளதாக தெரிவிக்கும் மேகலா. ‘இன்றும் கூட தோட்டத்தின் இளைஞரொருவருக்கு முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் சவாரிக்கு இடங்கொடுப்பதில்லை. எப்படியாவது இடத்தைப் பெற்றுக் கொண்டால் ஹயர் கிடைக்கச் செய்ய விடமாட்டார்கள்.”

‘முதலாவதாக தோட்ட மக்களுக்கும்கிராம மக்களுக்குமிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.”

### பிரஜா உரிமை சட்டத்தினூடாக நாடு கடத்தல்

1947ஆம் ஆண்டு அரசுப் பேரவை தேர்தலில் மலையக தோட்ட தொழிலாளர்களின் பிரதிநிதிகள் பலர் தென் பிரதேச இடதுசாரிகள். அவர்கள் தோட்ட தொழிலாளர்களின் வாக்குகளினால் அரச சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்விடயத்தில் கவனஞ் செலுத்திய முதலாளித்துவ தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்களின்பலத்தை குறைப்பதற்காக 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பிரஜா உரிமை சட்டத்தை அறிமுகப்படுத்தினர். பிரஜா உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தந்தை அல்லது பொறுப்பாளர் இலங்கையில் பிறந்தவராக இருத்தல் வேண்டுமென்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. அந்நிபந்தனைகளை மேலும் பலப்படுத்திக் கொண்டு 1949ஆம் ஆண்டு 3 ஆம் இலக்க பிரஜா உரிமை சட்டம் அமுல்படுத்தப்பட்டது.



இச்சட்ட மூலம் காரணமாக இந்திய மற்றும் பாகிஸ்தானிய வம்சாவளியைச் சேர்ந்த தோட்ட தொழிலாளர்கள் உட்பட ஏனைய பல பேருக்கு, பிரஜா உரிமைத்துவம் வாக்குரிமை உட்பட ஏனைய சட்ட பூர்வ தன்மைகள் இழக்கப்பட்டமை பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியது. இப்பிரச்சினையை சுமூகமாக தீர்த்துக்கொள்ளும் நோக்கில் இலங்கை பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை மற்றும் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆகியோருக்கிடையில் 1954ல் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

‘இவ்வுடன்படிக்கையினூடாக பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாத காரணத்தினால்அதற்கு 10 வருடங்களுக்குப் பின்னர் 1964ல் ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பிரஜா உரிமை நீக்கம் செய்யப்பட்டு 9,75,000 தோட்டத்தொழிலாளர்கள் இருநாடுகளுக்கிடையில் பிரித்துக் கொள்ளப்பட்டன. இந்தியா 5,25,000 தொழிலாளர்களை மீளப்பெற்றுக்கொண்டது. இலங்கை மூன்று லட்சம் பேரை பொறுப்பேற்றுக்கொண்டது. எஞ்சியிருந்த 1,50,000 தொழிலாளர்களை அதற்கு பத்து வருடங்களின்பின்னர்1974ல்ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீமா-இந்திரா ஒப்பந்தத்தினூடாக 75,000 என்றடிப்படையில் தோட்டத்தொழிலாளர்களை இரு நாடுகளும் பிரித்துக்கொண்டன”எனமலையகத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் அமைப்பின் ஏற்பாட்டாளர் எம்.கந்தைய்யா தெரிவிக்கின்றார். அரசியல் மற்றும் தொழிற்சங்க செயற்பாட்டாளரான இவர் 1983ஆம் கறுப்பு ஜீலையின் பின்னர் இந்தியாவுக்கு புலம்பெயர்ந்தவர்.

“இந்தியாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் றப்பர் மற்றும் தேயிலை தோட்டங்களில் வேலைகள் கிடைத்தன. கன்னியாகுமரி மாவட்டத்தின் கர்நாடகா, கேரள மற்றும் ஆந்திரா பிரதேச றப்பர் தோட்டங்களில் சுமார் 4000 குடும்பங்கள் பனிபுரிந்து

வருகின்றனர்." பிரஜா உரிமைகளுடன் தொடர்புடைய மற்றும் முன்னர் குறிப்பிடப்பட்ட உடன்படிக்கைகளுக்குறேப வெளியேற்றப்பட்ட தோட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 4,61,000 ஆகும். தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா பிரதேசம், கேரளா மற்றும் அந்தமான் தீவுகள் தற்போது இவர்களுடைய நிரந்தர வாழ்விடங்களாகி விட்டன.

இன்றும் நண்பர்கள் மற்றும் உறவினர்களை வருடத்திற்கொருமுறை வந்து பார்த்து விட்டுச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டிக்கின்றனர்.

கந்தைய்யா கூறுவது போல் 1977,1981 மற்றும் 1983 வன்செயல்களிலிருந்து உயிர் பிழைத்துக் கொள்வதற்காக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தப்பிச்சென்றவர்களின் எண்ணிக்கை இரண்டு லட்சத்திற்கும் அதிகமாகும்.



## பெருந்தோட்டங்களை மக்கள் மயப்படுத்தல் மற்றும் தனியார் மயமாக்களுக்கான அழுத்தம்

1970ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் அதுவரை பிரித்தானியர்களிடமிருந்த முன்னணி தேயிலை, றப்பர் மற்றும் தென்னந்தோட்டங்கள் மக்கள்மயப்படுத்தலின் கீழ் அரசுடைமையாக்கப்பட்டது. மலையக பெருந்தோட்ட அபிவிருத்தி சங்கம்(ஜனவசம), அரச பெருந்தோட்ட தினைக்களங்கள் மற்றும் மலையக பெருந்தோட்ட அபிவிருத்தி சங்கம் (உசவசம) போன்ற அரச நிறுவனங்களை அமைத்து அதனூடாக தோட்டங்கள் நிர்வகிக்கப்பட்டன. அரசுக்கு நெருக்கமானவர்களைக் கொண்டிருந்த இந்நிறுவனங்களினூடாக மக்கள் மயப்படுத்தல் காரணமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு நன்மை விளைந்தது. தேயிலை, றப்பர், தென்னந் தோட்ட தொழிலாளர்கள் நாட்சம்பளத்திற்கு பதிலாக தொழிலாளர்கள் கூட்டாக மாதச் சம்பளத்தை வழங்குமாறு கோரியிருந்தனர். ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்க தலைவரும், இடதுசாரி முன்னணிதலைவர்களிரொருவரான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பெருந்தோட்ட துறை அமைச்சரான கொல்வின் ஆர் டி சில்வாவினால் அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. உலகில் எந்தவொரு நாட்டிலும் தோட்ட தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம் வழங்கப்படுவ தில்லையென தெரிவித்துள்ளாரென தான் எழுதிய தோட்ட மக்களின் வரலாறு என்ற நூலில் கம்யூனிஸ தொழிறசங்க தலைவரான எஸ். நடேசன் தெரிவித்துள்ளார். தோட்டங்கள் மக்கள் மயப்படுத்தல் காரணமாக அதுவரை லயன் காம்பராக்களுக்கும் தோட்டங்களுக்கும் கம்யூனிஸ தலைவர்களுக்கு உள்நுழைவதற்கு அதுவரை காலம் இருந்த சில தடைகள் நீக்கப் பட்டிருந்தாலும் வீடு மற்றும் காணி தொடர்பான பிரச்சினைகள் தொடர்ச்சியாக இருந்து கொண்டேயிருந்தன. அதுவரை காலம் நிறுவனங்களிற்கு கீழ் இருந்த 300 தோட்ட பாடசாலைகள் இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு தசாப்த காலத்தின் பின்னரே கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டன.



அப்போதிருந்த பலம்பொருந்திய தொழிற்சங்கமும் அரசியல் முன்னோடியுமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஒத்துழைப்புடன் அரசுப் பேரவை ஆட்சியின் கீழ் நிர்வகிக்கப்பட்ட தோட்ட நிர்வாகங்களின் திறனற்ற நிர்வாகம் காரணமாக தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகவும் அதனால் 1992 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தோட்டங்களை தனியார் மயப்படுத்தியது. 1992 ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின் படி அரசாங்கத்தின் தனியார் மயப்படுத்தல் திட்டத்தின் கீழ் பெருந்தோட்ட அபிவிருத்தி சங்கத்தினாலும் மற்றும் அரச பெருந்தோட்ட தினைக்களத்தினாலும் நிர்வகிக்கப்பட்ட 449 தோட்டங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டன. அவற்றில் 131 றப்பர் தோட்டங்கள் அரசின் கீழ் இருந்தவையே.

தனியார் மயப்படுத்தலின் போது அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவிற்கேற்ப நாளொன்றுக்கு 20 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென நிறுவனங்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டது. ஆனால் அந்நிபந்தனைகளை பின்பற்றுவதில் தோட்ட நிறுவனங்கள் அக்கறை கொண்டிருக்கவில்லை. அதேபோல் அதுவரை காலம் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியங்களை ரத்துச்செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சியை தொடர்ந்து தொழிலாளர்களுக்கிடையில் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்தன.

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**☎ 0777 43 55 57**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.09.2024இல் வெளியிடப்பெற்றது.